Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல் மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

* பல் கட்டுவதற்கும்,
* பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
* இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-1761)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 08 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 முஹறம் 29 (21.03.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:172

## ஆனந்தசங்கரி தொடுத்த வழக்கு மே மாதம் 10 இற்கு ஒத்திவைப்பு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தொடுத்த வழக்குத் தொடர்பான விசாரணை மே மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

தமது தரப்பு வாதங்களை முன்வைக்க தமக்கு கால அவகாசம் தரவேண்டுமெனக் கோரி தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் இரா.சம்பந்தன், மற்றும் கட்சியின் உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் இருவரும் தமது சட்டத்தரணியான மோகன் பாலேந்திரா மூலம் நீதிமன்றில் கேட்டிருந்தனர்.

இதற்கமைவாக கொழும்பு மாவட்ட நீதிபதி இவர்கள் இருவரும் தமது வாதங்களை மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவித்ததுடன் இந்த வழக்கு மீதான விசாரணையையும் மேமாதத்திற்கு ஒத்திவைத்தார்.

ஆனந்தசங்கரி தொடுத்த வழக்கின் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக்கட்சியின் வீடு சின்னத்திலும், ஆனந்தசங்கரி சுயேட்சைக்குழு சார்பாக பூட்டு சின்னத்திலும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.பல்கலைக் கழக

## மருத்துவ பீட மாணவன் மயங்கி வீழ்ந்து மரணம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் ஒருவன் திடீரென மயங்கி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 11 மணியளவில் இடம்பெற்றது. எஸ்.சரவணபவன் (வயது 21) என்ற மாணவனே மரணமடைந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இரண்டாம் வருட மாணவனான சரவணபவன் திடீரென தலைச்சுற்று ஏற்பட்டு மயங்கி வீழ்ந்தார். இதனை அடுத்து அவருக்கு அண்மையில் இருந்த மாணவர்களின் உதவியுடன் அவர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு வைத்திய பரிசோதனை இடம் பெற்றபோது, சரவணபவன் மரணமடைந்தார் என தெரிவிக்கப்பட்டது. உடல் வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# பொதுத்தேர்தல் வாக்களிப்புக்கு வசதியாக புரிந்துணர்வு உடன்பாட்டில் விட்டுக்கொடுப்பு

### பவ்ரல் அமைப்பிடம் புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்கு உதவும் வகையில், புரிந்துணர்வு உடன்படிக்கையில் சில விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ள தயாராகவிருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.**

தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடவுள்ள பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகள் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே, இந்த முடிவு அறிவிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

தேர்தல் விதிமுறைகளுக்கு அமைவாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்கள் வாக்களிப்பதற்காக அமைக்கப்படவுள்ள கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் பாதுகாப்பு வழங்கவுள்ளனர். அத்துடன், கடந்த 20 வருடங்களாக தமது (12 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பாளரை அனுமதித்ததற்கு புலிகளுக்கு பவ்ரல் அமைப்பு பாராட்டு!

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் உள்ள வாக்காளர்கள், எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று, சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு நிலையம (பவ்ரல்) விடுத்துள்ள அறிக்கையில், இராணுவத்தினரையும், விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாக்களிப்பு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு கண்காணிப்பாளர்களை விடுதலைப் புலிகள் இயக்கம் அனுமதிக்க தடை எதனையும் விதிக்காமை குறித்து பவ்ரல் அமைப்பு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

கடந்த காலச் செயற்பாடுகளை கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையாளர், கட்டுப் பாடற்ற பிரதேசங்களில் வாக்குச் சாவடிகளை அமைப்பது தொடர்பாக பாதுகாப்புத் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பின்னர், (12 ஆம் பக்கம் பார்க்க)

## வித்துடல் விதைப்பு

கடந்த 18 ஆம் திகதி சுகவீனம் காரணமாக சாவடைந்த மேஜர் மோகன் (அருள்ராஜா - ஜெசிக்குமார்) என்ற மாவீரரின் வித்துடல் நேற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

முன்னதாக இவரின் நிரந்தர முகவரியான கொக்குவில் மேற்கில் அமைந்துள்ள இவரது இல்லத்திலிருந்து மாலை 3.30மணியளவில் வித்துடல் காந்திஜி சனசமூக நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டு, மக்கள் அஞ்சலிக்காக வைக்கபபட்டது. இதன்பின் கொக்குவில் மேற்கு கிராமசேவையாளரின் தலைமையில் நடந்த கூட்டத்தில், (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயை அழைத்தது சமாதானத்துக்கே பிரச்சினையினை உருவாக்குவதற்கு அல்ல!

### முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளராகவே நோர்வேக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு பிரச்சினைகளை உருவாக்குவதற்காக அல்ல என்று முன்னாள் பிரதமரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தருமான ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

ஹொரணையில் தோட்டத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு ரத்னசிறி விக்கிரமநாயக்க மேலும் பேசுகையில்,

இன்று இலங்கை ஒரு சுதந்திரமான நாடாக உள்ளது. எதிர்காலத்திலும் எந்த அந்நிய தலையீடுகளும் இன்றி சுதந்திரமாக இருக்க வேண்டும்.

கருணா விவகாரத்தை புலிகளே தீர்த்துக் கொள்ள நோர்வே விட்டுவிட வேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குழப்பத்தில் முடிந்த வடக்கின் பெரும்போர்!

யாழ். மத்தியகல்லூரி மைதானத்தில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்ற வடக்கின் பெரும் போர் கிரிக்கெட் போட்டி நேற்றுமாலை குழப்பத்தில் முடிந்தது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

இரண்டாவது இன்னிங்ஸில் 39 ஓவர்களில் 135 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய சென்ஜோன்ஸ் கல்லூரி 24 ஓவர்களில் 105 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் விசமிகள் மைதானத்திற்குள் புகுந்தனர்.

இவர்கள் ஆடுகளத்திலிருந்த சாக்கு விரிப்பில் பெற்றோல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அதாவுல்லாவை எதிர்த்து மூதூரில் நேற்று ஹர்த்தால்!

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர்ப் பிரதேசத்தில் அதாவுல்லாவினால் நடத்தப்பட இருந்த பிரசாரக்கூட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

தேசிய ஐக்கியமுன்னணியைச் சேர்ந்த அதாவுல்லாவினால் நேற்று மாலை 4.30 மணியளவில் மூதூர் கட்டைபறிச்சான் இராணுவ முகாமிற்கருகில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்று நடத்தப்பட இருந்தது.

ஆனால் இவரின் வருகையை எதிர்த்த அங்குள்ள முஸ்லிம்மக்கள் நேற்றுக் காலை ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தனர்.

இதனால் அங்கிருந்த வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன. அரச அலுவலகங்கள், (12 ஆம் பக்கம் பார்க்க)


தமிழ் மக்களினதும், தாயக மண்ணினதும்,
விடுதலைக்காகவும் விடிவுக்காகவும் ஜனநாயக வழியில்
போராடிய உங்கள் மைந்தன்
செல்வராஜா கஜேந்திரன்
யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவரும்,
சர்வதேச மாணவர் பேரவை முன்னாள் தலைவரும், பொங்குதமிழ் தமிழனும்
உங்கள் வாக்கு

X 10
கனேடிய தமிழ் மாணவர் ஒன்றியம்
(371)

## திறந்த பல்கலைக்கழக

# மாணவர் மன்றத் தேர்தலில் வாக்களிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக சமூகவிஞ்ஞானபீடத்தின் மாணவர் சங்கத்தேர்தல் நேற்று, இன்று, நாளை என மூன்று நாட்கள் நடைபெறுகின்றது.

காலையிலிருந்து பகல் 12 மணி வரை இந்த வருடத்துக்கான மாணவர் மன்றத்தேர்தல் நடைபெறவுள்ளதனால், இந்தப் பீடத்தின்கீழ் (சட்ட மாணவர், சிறு வணிக முகாமைத்துவம், சமூகவிஞ்ஞானவியல், மொழியியல்) கல்விகற்கும் மாணவர்கள் அனைவரும் யாழ்.பிராந்திய நிலையத்திற்கு சமுகமளித்து தங்களது வாக்குகளைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# கட்டடம் இடிந்து வீழ்ந்து குடும்பஸ்தர் படுகாயம்!

கட்டடம் ஒன்றினை இடித்துக் கொண்டிருந்த தொழிலாளி மீது அந்தக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் மேற்கு பூனாறி மாத்தடியைச் சேர்ந்த கே.பாக்கியநாதன் (வயது 54) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பழைய கட்டடத்தினை இடித்துவிட்டு, புதிய கட்டடம் கட்டுவதற்காக அதனை இடித்துக்கொண்டிருந்த வேளையிலேயே குறிப்பிட்ட கட்டடம் இடிந்து அவர்மீது வீழ்ந்துள்ளதாகத் தெரியவருகிறது. (ப,121)

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு மூன்று மாதமாக சம்பளம் இல்லை!

கிளிநொச்சி மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்குரிய மூன்று மாதகாலச் சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை.

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இந்தச் சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படாமையினால், பாதிக்கப்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் இது தொடர்பாக கிளிநொச்சி கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டபோது, இதுவரை இந்தச் சம்பளம் தொடர்பான அறிவுறுத்தல் எதுவும் தனக்கு கிடைக்கவில்லை எனத்தெரிவித்தார்.

மாதச் சம்பளமாக 1500 ரூபாவே வழங்கப்படுகின்றபோதிலும், அதுவும 3 மாத காலம் வழங்கப்படாமையால், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் பெரும் விசனமும், அதிருப்தியும் அடைந்துள்ளனர். (34)

# கணினி பயிற்சி நிலையத் திறப்பு விழா

(நெடுந்தீவு)

தென்இந்தியத் திருச்சபையின் நெடுந்தீவு பகற்பராமரிப்பு நிலையத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடத்திறப்புவிழாவும், கணினிப்பயிற்சி நிலையத்திறப்பு விழாவும் இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தநிகழ்வின் பிரதம விருந்தினராக, தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.பேராயர் கலாநிதி. எஸ்.ஜெபநேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார் . நெடுந்தீவில் முதன் முறையாக ஆரம்பிக்கப்படவுள்ள பொது கணினி பயிற்சி நிலையத்தினால், பல வறிய மாணவர்களும் கணினி அறிவைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். தற்போது பலர் பெரும் பணம் செலவு செய்தே யாழ்ப்பாணம் சென்று கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(113)


திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து

பரமலிங்கம் றெஜினாதேவி தம்பதிகள்

தமது இல்லற வாழ்வின் முதலாண்டு நிறைவை
இன்று சுதுமலை இல்லத்தில்
விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.



எல்லாம் வல்ல புவனேஸ்வரி அம்பாள்
கடாட்சம் பெற்று
சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்தும்

அச்சுவேலி. ப.கமலேஸ்வரி (சி-2329)

இதய அஞ்சலி

அமரர்
கந்தசாமி சரவணபவன்
(26 ம் அணி மருத்துவ மாணவன்)

அன்னை மடியில் 15.05.1983
ஆண்டவன் அடியில் 20.03.2004

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும், மருத்துவ பீட மாணவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

சர்வதேச தமிழீழ
மாணவர் பேரவை (670)


# தமிழ்த்தேசத்தின் ஒற்றுமையைக் காக்க பெண்களின் பங்களிப்பு முக்கியமானது!

## இளம்பரிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது தமிழ் தேசத்தின் ஒற்றுமையை சர்வதேசத்துக்கு எடுத்துக் காட்டுவதற்கு தேர்தல் களமொன்றில் தமிழ்மக்கள் இணைந்துள்ளார்கள். இதில், பெண்களின் பங்கு முக்கியத்துவம் கொண்டதாக உள்ளது என யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்றையதினம் பெண்கள் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பெண் வேட்பாளர் அறிமுகநிகழ்வும், பெண்கள் எழுச்சிச் சங்கம நிகழ்வும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற போது, அங்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

சர்வதேச அங்கீகாரத்தைப் பெறுவதற்கு ஒரு விடுதலை அமைப்புக்கு குறிப்பிட்ட நிலம் வேண்டும். அந்த நிலத்தில் நிர்வாகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். எந்தச் சக்தியையும் எதிர்கொள்ளக்கூடிய பலம ஒன்று அந்த விடுதலை அமைப்புக்கு வேண்டும்.

எமது ஒற்றுமையை சர்வதேசத்துக்கு இந்தத் தேர்தல் மூலம் நிரூபிக்க வேண்டும். தீச்சுவாலைச் சண்டையில் பெண்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் காரணத்தினால்தான் இன்று அமைதிச் சூழல் ஒன்று நிலவி, தமிழ்மக்களின் வரலாற்றில் பெரும் மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தியது.

தமிழ்மக்களின் அரசியல் வெற்றியைத் தீர்மானிக்கும் களமாக இந்தத் தேர்தல் அமையவுள்ளது.

சர்வதேசத்தின் முன் தமிழ்மக்கள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பெண்கள் பலம் என்பது



இங்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. பெண்களே அரசியல் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டும். தமிழீழத் தேசியத் தலைவருக்கு தமிழ்ப் பெண்கள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என அவர் கருத்துத் தெரிவித்தார்.

## நெடுந்தீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளைமறுதினம் காலை 11.00 மணிக்கு உதவி அரசாங்க அதிபர் ச.பேரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தின்போது, போக்குவரத்து, மின்விநியோகம், குடிநீர் விநியோகம் மற்றும் பிறவிடயங்கள் தொடர்பாக வழமைபோல் ஆராயப் பட்டவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கான அழைப்புக்கள் ஏற்கனவே உரிய திணைக்கள அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## புதிய கட்டடத்திற்கு நிதியுதவி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற்கு புதிய கட்டடத் தொகுதி அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

120 அடி நீளமான கட்டடத் தொகுதியை அமைக்க 20 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக்கட்டடத் தொகுதியில் அதிபர் அலுவலகம், கணினிஅறை, நூலகம், வகுப்பறை என்பன அமைக்கப்படவுள்ளதாகவும் வித்தியாலய அதிபர் தெரிவித்தார். (113)

# களவுபோன செல்வச்சந்நிதி மணி பொலிஸாரால் மீட்கப்பட்டது!

சில வருடங்களுக்கு முன்னர் திருடப்பட்ட செல்வச்சந்நிதி ஆலய மணி தற்போது யாழ். பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

செல்வச்சந்நிதி ஆலயமணி கடந்த இராணுவ நடவடிக்கையின் போது திருடப்பட்டது. இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது,. இந்த மணியின் நாக்கு, பழைய இரும்பு கொள்வனவு செய்யும் முகவரிடம் இருப்பதாக யாழ். பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் சுமார் 40 கிலோ கிராம் நிறையுடைய மணியின் நாக்கை கைப்பற்றினர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். திருடப்பட்ட மணி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு ,லண்டனிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலக - பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான இந்த வருடத்திற்கான விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் - பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும். இந்த நிகழ்விற்கு, யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி சு.றொகான் இராஜசிங்கம், ஹாட்லிக் கல்லூரி அதிபர் வே.பத்மநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.


ராஜா யாழ்ப்பாணம்.



சூர்யா, த்ரிஷா நடித்த
மௌனம் பேசியதே
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே) (சி-2263)

நிறைஞ்சனாஸ் சங்கானை

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், லதா, மஞ்சுளா நடித்த
நேற்று இன்று நாளை (புத்தம் புதிய பிரதி)
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
STY KIDS - 2 (சி-2262)

The Royal College of Jaffna

ஆண்டு 1 இல் இருந்து மேற்படிப்பு வரை Grammar,Spoken English, கடிதம் கட்டுரை, வினாவிடை வகுப்புக்கள், ஆங்கில மூலம்-விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426, K.K.S வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை. (சி/2337)

திருமணசேவை

சக்தி திருமணசேவை - யாழ்-கொழும்பு, இந்திய வம்சாவளி, இந்து, R.C உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உள்ளனர். வெளிநாட்டுத் திருமணசேவை மூலம் மணமக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
Shakthi Marriage Private Services, 30, Ramani Mawatha, Negombo, Sri lanka. T.P - 0777-043138, 031-2232130. (669)

யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட், 35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/2152)

கொள்கைக்கான தேர்தல் - 2004 - ஏப்ரல் - 02



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்
யாழ்.மாவட்ட வேட்பாளர்
செல்வராஜா கஜேந்திரன்
முன்னாள் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியதலைவரும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவரும்.
மக்களினதும், மாணவர்களினதும் உரிமைக்காக குரல்கொடுத்த கஜேந்திரனுக்கு எமது விருப்பு வாக்கினைச் செலுத்தி அவரை வெற்றியடையச் செய்வோம்.

X 10

எமது நிலம் எமக்கு வேண்டும் (668)
நெடுந்தீவு வாழ் மக்கள்

# ஐ.நா. தலைமைக் காரியாலயம் முன் பொங்குதமிழ் நிகழ்வுக்கு ஏற்பாடு

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தேசியம், தன்னாட்சி என்பவற்றை வலியுறுத்தி ஜெனிவாவிலுள்ள ஐ.நாவின் தலைமைக்காரியாலயம் முன்பாக எதிர்வரும் 5 ஆம் திகதி பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இதுதொடர்பாக இந்த பொங்கு தமிழின் ஏற்பாட்டாளர்கள் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

வரலாற்று ரீதியாக தமிழர்கள் ஒற்றுமையுடன் வாழ்கின்றார்கள் என்பதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைக்கும் நேரம் இதுவாகும்.

எனவே, சர்வதேச சமூகமும் எமது ஒற்றுமையை உற்றுப்பார்க்கின்றது. ஆகவே, தமிழர் அனைவரும் இந்த பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்ளவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் - தமிழர் தேசியம், தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும். விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள்.

எனவே, அவர்களை தடைசெய்த நாடுகள் அந்தத் தடையினை நீக்கவேண்டும். தமிழர்களின் வாழ்விடங்களில் படையினர் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் உள்ளனர்.

இந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் உடன் அகற்றப்பட்டு, அங்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவேண்டும்.

மீனவர்கள் எந்தக்கட்டுப்பாடும் இல்லாமல் தமது தொழிலைச் செய்யவேண்டும். இவர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை படையினர் வழங்கவேண்டும். அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தவேண்டும்.

இத்துடன், இலங்கையில் ஒரு நிரந்தரமான தீர்வு எட்டப்படும்வரை வெளிநாடுகளில் வாழும் தமிழ் அகதிகளை அந்த நாடுகள் திருப்பி அனுப்பக்கூடாது.

போன்ற ஆறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் வாழும் சகல மக்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இணைப்பாளர் தெரிவித்தார்.

# சம்பள மீளாய்வுக் குழுவுக்கு லோகேஸ்வரன் தலைவர்!

(கொழும்பு)

அரச துறைசார் ஊழியர்கள் சம்பள மீளாய்வுக் குழுவின் தலைவராக கே.சீ.லோகேஸ்வரனை நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி நியமித்துள்ளார்.

இந்தக்குழு சம்பளத்திட்டங்களையும், சம்பளத்திட்டங்களில் நிலவுகின்ற சம்பள முரண்பாடுகளையும் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும். இந்த விடயத்தில் சுகாதாரத்துறையினரின் கோரிக்கைகளும் சேர்த்துக் கொள்ளப்படும் என நிதியமைச்சின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

கொரிய நாட்டின் முன்னாள் தூதுவராக இருந்த லோகேஸ்வரனுடன், சம்பள மீளாய்வுக் குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக என்.எச். பத்திரன, திருமதி.ஜி.சற்குணாநந்தன், பீ.ஏ.எம்.பெலிகாவத்த மற்றும் டபிள்யூ..ஆர்.பியசேன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இலங்கை நிர்வாக சேவையில் உயர்பதவிகளை வகித்த மூத்த நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் ஆவர்.

# திருமலை சிலுவைகள் அடித்து நொருக்கப்பட்டன

(திருகோணமலை)

திருகோணமலை நகரிலிருந்து 6 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள நாச்சிக்குடா மலையில் கிறீஸ்தவர்கள் நேற்றுமுன்தினம் சிலுவைப் பாதை தினத்தையொட்டி அமைக்கப்பட்ட 12 பாரிய சிலுவைகளில், ஒன்பது சிலுவைகள் இனந்தெரியாதோரால் அடித்து நெருக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் காலை இந்தப் பகுதிக்கு வழிபாட்டுக்குச் சென்றவர்கள் இந்தச் சம்பவம் தொடர்பாக அதிர்ச்சி அடைந்தனர்.

இதன் காரணமாக நாச்சிக்குடா மலைப் பகுதியில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.

### முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனுக்கு சொந்தமான

# இரண்டு பேருந்துகள் பொலிஸாரால் பறிமுதல்

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரும், முன்னாள் இந்து கலாசார அமைச்சருமான மகேஸ்வரனின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்து கலாசார அமைச்சிற்கு சொந்தமான இரண்டு பேருந்துகளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தப்பேருந்துகள் மகேஸ்வரனின் தேர்தல் பிரசார பதாகைகளாலும், சுவரொட்டிகளாலும் அலங்கரிக்கப்பட்டு கொழும்பு நகரில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வந்ததாக தெரிவித்துள்ள கொழும்பு கொம்பனித்தெரு பொலிஸ் நிலைய வட்டாரங்கள், இந்தப்பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தொடர்பாக தாம் கைது செய்த இருவர் தற்போது, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பொலிஸாரால் பறிமுதல செய்யப்பட்ட இரண்டு பேரூந்துகளும் கரவெட்டி சிறுவர் மற்றும் முதியோர் பராமரிப்பு இல்லங்களுக்கு இந்து கலாசார அமைச்சினால் வழங்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்க இராஜாங்க அதிகாரி அடுத்த வாரம் கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரப் பிரிவைச் சேர்ந்த முக்கிய அதிகாரி ஒருவர் அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரப் பிரிவின் பிரதி உதவிச் செயலாளரான ரோக்கல் எல். பற்றர்சன் என்ற உயரதிகாரியே இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

இந்த அதிகாரி தனது விஜயத்தின்போது, அரசாங்க அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் மற்றும் தனிப்பட்ட முக்கியஸ்தர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

ரோக்கியோவிலுள்ள அமெரிக்காவின் வெளிவிவகாரப் பிரிவைச் சேர்ந்த பற்றர்சன், 'ஜப்பானுக்கான தூதரக சிரேஷ்ட ஆலோசகராக பணியாற்றியிருந்ததாகவும் தெரிய வருகிறது.

# மட்டக்களப்பில் 13 இடங்களில் கொத்தணி வாக்குச்சாவடிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டப்பாட்டிலுள்ள பிரதேச மக்கள், இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாக்களிக்க 13 இடங்களில் கொத்தணி முறையில் 89 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளது.

மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரும், தெரிவத்தாட்சி உத்தியோகத்தருமான மோனகுருசாமி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதில், மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ்.கிருஸ்ணானலிங்கம், மட்டக்களப்பு 233 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோர் இந்தக் கூட்ட்த்தில் கலந்துரையாடினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் 75 ஆயிரம் வாக்காளர் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மின்சார சபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்திற்கு முஸ்தீபு

### மின்சாரசபை தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

சம்பள உயர்வு உட்பட மூன்று பிரதான கோரிக்கைகளை முன்வைத்து அடுத்த வாரம் முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபை தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமது சம்பள முரண்பாட்டை உடனடியாகத் தீர்த்துவைக்கக் கோரி கடந்த வியாழக்கிழமை ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தை மேறகொண்டபோதிலும், பொதுத் தேர்தலுக்குப் பின்னரே இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கமுடியுமென அரசாங்கம் தெரிவித்துள்ளதாக சங்கம் தெரிவித்தது.

இலங்கை மின்சக்தி தொழிற்சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் இது தொடர்பாகத் தெரிவிக்கையில் -

மின்சக்தி தொழிற்சங்கக் கூட்டமைப்பில் சுமார் 28 சங்கங்கள் அங்கம் வகிப்பதாகவும் தமது நியாயமான கோரிக்கையை மின்சாரசபை உதாசீனப்படுத்துமிடத்து, அடுத்த வாரம் முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இன்று சங்கத்தின் நிர்வாக சபை கூடித் தொடர் வேலைநிறுத்தம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்த அவர், 24 சங்கங்கள் இணைந்து மேற கொண்ட அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# குறைந்தவிலையில் விற்ற காணிகள் அடுத்த ஆட்சியில் மீளப்பெறப்படும்!

### ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கை

தற்போதைய அரசாங்கத்தில் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் குறைந்த விலையில் விற்கப்பட்ட காணிகளை இனிவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மீளப்பெறும் என்று, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகளிர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தக் காணிகள் குறிப்பிட்ட பிராந்தியங்களுக்குப் பொருத்தமான பயிர் செய்கைக்கென்று மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

யுத்தம் பெண்கள் எதிர்கொள்ளும் பாரதூரமான நெடுக்கடியாகும். இராணுவத்தின் யுத்த காலத்தில் இறக்க நேரிடும் பொழுதும், அங்கவீனர்கள் ஆகும் போதும், பெண்களே கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வட-கிழக்கு இணைந்ததுதான் தமிழீழம் அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை

### பி.பி.சிக்கு ஜோசப் பரராஜசிங்கம் பேட்டி

(கொழும்பு)

எங்களுக்கென கொள்கைமுறையான சில நடைமுறைகள் இருக்கின்றன. அதன் பிரகாரம் இணைந்த வடக்கு - கிழக்குத்தான் தமிழ்ப் பகுதி என்பது, எவரும் மறுக்கமுடியாத அளவுக்கு தமிழ்த்தேசியம் வளர்க்கப்பட்டது.

இவ்வாறு, கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளரான ஜோசப் பரராஜசிங்கம் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - தந்தை செல்வா காலத்தில்கூட ஒரு சமஷ்டி அமைப்பு முறை இணைந்து வடக்கு - கிழக்கு என்பதில் எந்தவித மாற்றமுமில்லை. இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கூட இணைந்த வடக்கு - கிழக்கு என்பது மாற்றப்படவில்லை. பண்டா செல்வா ஒப்பந்தத்தில்கூட வடக்கு-கிழக்கு இணைப்பு அங்கே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனவே, வடக்கு-கிழக்குத்தான் இணைந்த தமிழீழம், தமிழரின் தாயகம் என்ப்தில் எந்தவித மாற்றுக்கருத்தும் இருக்க முடியாது. அதே நிலைப்பாடுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாகும்.

17,700 மாவீரர்களின் தியாகங்கள் கூட இந்த தமிழீழ கொள்கைக்ளுக்குத்தான். தமிழீழம் என்பது இணைந்த வடக்கு - கிழக்கு என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. எனவேதான் இந்த அடிப்படைக் கொள்கை என்னைப் பொறுத்தமட்டில் நான் கடைப்பிடித்து வருகின்றேன்.

மாவட்ட அபிவிருத்தி என்று வரும்போது என்னுடைய நூறு வீத ஆதரவு இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டம் அபிவிருத்தி அடைய வேண்டும். ஆனால், கொள்கையோடு அபிவிருத்தியைக் கலப்பது அவ்வளவு உயர்ந்ததல்ல என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# அனைத்து ஊடகங்களின் தலைவர்களையும் தேர்தல் ஆணையாளர் நாளை சந்திக்கவுள்ளார்

தேர்தல் வன்முறைகள் நாளுக்க நாள் அதிகரித்து வருவதால் அனைத்து ஊடகங்களின் தலைவர்களையும் தேர்தல் ஆணையாளர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் இராஜகிரியவிலுள்ள தேர்தல் திணைக்களத்தில் நாளை நடைபெறவுள்ளது.

அரசாங்க ஊடகங்கள் பக்கச்சார்பாக நடந்து கொள்வதாக ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியும், ஜாதிக ஹெல உறுமயவும் குற்றம் சாட்டியிருந்தன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் அரச தனியார் ஊடகத்துறைகள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பன தொடர்பாக ஆலோசிப்பதற்காகவே தேர்தல் ஆணையாளர் இந்தக் கூட்டத்தில் கூட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(01)

### நெதர்லாந்து அரசாங்கம்

# தேர்தல் கண்காணிப்புக்கு 60 மில்லியன் உதவி!

எதிர்வரும் பொதுத்தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைக்கு ஏற்படும் செலவுகளை ஈடுசெய்வதற்கு நெதர்லாந்து அரசு 60 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

நெதர்லாந்தின் தூதுவர் சுசான் பிளாஸ்கிட் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்து, பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் சுயாதீனமாக இடம்பெறவேண்டும் என்றும், இதற்காக நெதர்லாந்து அரசு 60 மில்லியன் ரூபாவை வழங்கும் எனவும் உறுதியளித்திருந்தார்.

இதன்படி 60 மில்லியன் ரூபாவையும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தின் பிரதிநிதிகளிடம் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

(01)

# இலங்கையுடனான டெஸ்ட் தொடரை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றியது!

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் நடந்த இரண்டாவது டெஸ்டில் அவுஸ்ரேலியா 27 ஓட்டங்களால் இலங்கை அணியைத் தோற்கடித்ததுடன் தொடரையும் கைப்பற்றியது.

நேற்று முன்தினம் 301 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்த இலங்கை அணிக்கு வெற்றி பெறுவதற்கு 51 ஓட்டங்கள் இருந்த நிலையில் 3 விக்கெட்டுக்கள் மீதமாக இருந்த நிலையிலும் ஆட்டம் நிறைவிற்கு வந்தது.

நேற்று 51 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்று விடலாம் என்ற நிலையில் ஆட்டத்தைத் தொடங்கிய இலங்கை அணி வீரர்களின் விக்கெட்டுக்கள் ஆட்டம் தொடங்கிய சில மணிநேரத்திற்குள்ளேயே விழ்த்தப்பட்டன.



வெல்லவேண்டிய இந்தத் தொடரை சமிந்தவாஸ் சற்றுப் பொறுமையாக ஆடியிருந்தால் வென்றிருக்கலாம். இதன்படி மூன்று போட்டிகளைக் கொண்ட தொடரில் இரண்டை வென்றதன் மூலம் அவுஸ்ரேலியா தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இந்த இரண்டாவது டெஸ்டில் அவுஸ்ரேலியா தனது முதல் இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 442 ஓட்டங்களையும் பெற்றது.

இலங்கை அணி முதல் மற்றும் இரண்டாவது இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து முறையே 211, 324 ஓட்டங்களைப் பெற்றது.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக இரண்டாவது டெஸ்ட்டில் 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய ஷேன் வோர்ன் தெரிவானார்.

இதேவேளை - ஆட்டநாயகன் விருது பெற்ற பின் வோன் தெரிவிக்கையில், இலங்கையுடனான மூன்றாவது டெஸ்டின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஷ் கைப்பற்றி உலக சாதனையாகவுள்ள 519 விக்கெட்டுக்கள் என்ற சாதனையை தன்னால் முறியடிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

## அடுத்த இரண்டு போட்டிகளிலும் சிறப்பாக ஆடி வெற்றி பெறுவோம்!

### இந்திய அணித் தலைவர் கங்கூலி தெரிவிப்பு



பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டு ஒரு நாள் போட்டிகளில் இந்தியா வெற்றி பெறும் என கப்டன் கங்கூலி நம்பிக்கை தெரிவித்தார்.

பெஷாவரில் நேற்றுமுன்தினம் நடந்த பாகிஸ்தானுககு எதிரான மூன்றாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி கண்டது. இந்த வெற்றியின் மூலம் 5 ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரில் பாகிஸ்தான் 2-1 என்ற நிலையில் முன்னணியில் உள்ளது.

பின்னர் தோல்வி குறித்து இந்திய அணி கப்டன் கூறியதாவது - அடுத்து நடைபெறவுள்ள இரண்டு ஒருநாள் ஆட்டங்களும் எங்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். அதில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்ற முயல்வோம்.

தொடக்கத்தில் வேகமாக 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினோம். ஆனால், அந்த நிலையை நீடிக்க முடியாமல் போய்விட்டது. ஒரு கட்டத்தில் 65 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தோம். மேலும் கூடுதலாக ஒரு சில விக்கெட்டுக்களை உஷாராக வீழ்த்தியிருந்தால் இழப்பைச் சந்திக்க நேரிட்டிருக்காது எனத் தெரிவித்தார்.

## தென்னாபிரிக்காவுடனான 2 ஆவது டெஸ்ட்: நியூசிலாந்து அணி வலுவான நிலையில் !



நியூசிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் ஒக்லண்டில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளான நேற்றைய ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 584 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆடத்தொடங்கிய நியூசிலாந்து அணி பலமான நிலையை மூன்றாவது நாள் ஆட்டத்தில் பெற்றுக்கொண்டது.

நியூசிலாந்து அணி சார்பாக ஸ்ரைஸ் 170, மக்கமிலன் 82, ஒய்ன்ஸ் 158, ஜேக்கப் ஓரம் 90 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

டானியல் விற்றோரி 02 ஓட்டங்களுடன் ரபி 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக என்ரினி மூன்று விக்கெட்டுக்களையும் பொலக் 2 விக்கெட்டுக்களையும் கலிஸ் நிக்கிபோஜி சிமித் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளனர்.

நியூசிலாந்து அணிக்கு எதிராக முன்னதாக தென்னாபிரிக்க அணி 296 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து அணியின் பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் இக்கட்டான நிலையில்

இங்கிலாந்துக்கெதிராக ரினிடாட்டில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் எட்டுவிக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

ஒரு கட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்டக்காரர்கள் கைல், ஸ்மித் ஆகியோரின் இணைப்பாட்டத்தினால் வலுவான நிலையில் இருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி, கார்மிசனின் அற்புதமான பந்துவீச்சினால் விக்கெட்டுக்களை மளமளவென இழந்தது.

மேற்கிந்திய அணி சார்பில் - கைல் 62, ஸ்மித் 35 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனா. ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

அணித் தலைவர் பிறைன் லாரா ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

இங்கிலாந்து அணி சார்பில் - கர்மிசன் 17 ஓவர்கள் பந்துவீசி 48 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். சொசாட், ஜோன்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



மேற்கிந்தியத் தீவுகளுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் கர்மிசன் ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு வழிகோலியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது டெஸ்ட் மழை காரணமாக 3 மணிநேரம் தாமதித்தே ஆரம்பித்தது. முதல் நாள் ஆட்டத்தில் 54 ஓவர்களே வீசப்பட்டன.

விளையாட்டு

## அக்தரின் பந்து வீச்சில் சந்தேகம் அதிகரிக்கின்றது

### பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர்



பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர் சொகைப் அக்தரின் பந்து வீச்சில் சந்தேகம் இருக்கின்றது என பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் முஸ்தாக் முஹமது தெரிவித்தார். இதன்மூலம் அக்தர் மீதான சர்ச்சைவலுக்கிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப் பந்துவீச்சாளரான ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் என அழைக்கப்படும் அக்தர் பந்தை எறிகிறார் என்ற புகார் அவ்வப் போது எழும்பி அமுங்கி விடுவது வழக்கம்.

முன்னர் ஒருமுறை அக்தரின் பந்துவீச்சை சர்வதேச கிரிக்கெட் சபை உன்னிப்பாக பரிசோதித்தது. பின்னர் அவர் அந்தக் குற்றச் சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில், அக்தரின் பந்துவீச்சில் சந்தேகம் இருக்கிறது. அவர் ஒருவார காலம் ஆடாமல் தனது பந்து வீச்சு முறையை சரி செய்துவிட்டு சர்வதேச போட்டிக்கு வரவேண்டும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் முஸ்தாக் முஹமது தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இந்திய அணி கப்டன் கங்கூலி ராவல்பிண்டியில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையில் -

அக்தரின் பந்துவீச்சில் சந்தேகம் இருப்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டினார்.

மேலும் இந்திய அணி வீரர் பாலாஜியின் பந்துவீச்சும் சிலவேளைகளிலும் சந்தேகம் எழுப்புகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே -

இந்திய அணியின் முன்னாள் கப்டன் பிஷன்சிங் பேடி, புதிய குற்றச்சாட்டை தெரிவித்துள்ளார். அதில் இலங்கை வீரர்கள் மூவர், பாகிஸ்தான் வீரர்கள் நால்வர் பந்தை எறிவதாக அவர் கூறியுள்ளார்.

இந்திய அணி வீரர் பாலாஜியின் பந்து வீச்சிலும் சில வேளைகளில் சந்தேகம் எழுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## இளங்கோவனுக்காக பிரசாரம் செய்ய பிரியங்கா காந்தி தமிழகம் வருகிறார்!

தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் இளங்கோவன் கோபிச் செட்டிப்பாளையத்தில் போட்டியிடவுள்ளார். அவருக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய சோனியா காந்தி அல்லது பிரியங்கா வரவுள்ளார்.

தமிழக காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படவில்லை. இரண்டு பேர் மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளனர். மற்றவர்களின் பட்டியல் விரைவில் வரும் என்று தெரிகிறது.

கோபிச் செட்டிப்பாளையம் தொகுதியில் இளங்கோவன்தான் போட்டியிடுவார் என்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது. இந்த விடயத்தை இளங்கோவனிடமும், தி.மு.க தலைமையிடமும் டெல்லி காங்கிரஸ் தலைமை தெரிவித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

அவரிடம் கோபிச் செட்டிப்பாளைய வேட்பாளர் நீங்கள் தான் என்பது உறுதியாகிவிட்டதா என்று செய்தியாளர்கள் கேட்ட போது,

வேட்பாளர்யார் என்பது இன்னும் சில தினங்களில் தெரிந்து விடும். இங்கு போட்டியிடும் வேட்பாளருக்கு ஆதரவாக சோனியாகாந்தி அல்லது பிரியங்கா காந்தி ஆகியோரில் ஒருவர் பிரசாரம் செய்வார்கள் என்றார்.

ஜெயலலிதாவை கடுமையாகத் தாக்கி வரும் இளங்கோவனுக்கு சோனியாவைவிட பிரியங்காவிடம் அதிக செல்வாக்கு உள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் அவருக்காக பிரியங்கா பிரசாரத்துக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அரசியற் கட்சி எதிலும் நான் இணையமாட்டேன்!

### இந்தி நடிகர் அமிதாப்பச்சன் அறிவிப்பு

எந்த அரசியல் கட்சியிலும் சேரமாட்டேன் என்று நடிகர் அமிதாப்பச்சன் அறிவித்திருக்கிறார்.

ஹேமமாலினி உட்பட நடிகைகளும், நடிகர்களும் அரசியலில் குதித்த வண்ணம் இருக்கின்றனர்.

இந்த நிலையில், இந்திப் பட உலகில் 'மெகா ஸ்டாராக' கருதப்படும் அமிதாப்பச்சன் அரசியலுக்கு வருவாரா என்று அவரிடமே கேட்கப்பட்டது.

அதற்கு அம்தாப்பச்சன் தனது தெளிவான பதிலைத் தெரிவித்திருக்கிறார். அரசியற் கட்சிகளில் சேரும் நடிகர், நடிகைகளைப் பற்றி நான் விமர்ச்சிக்க விரும்பவில்லை. இதில் எனது நிலை தெளிவானது. நான் எந்த அரசியற் கட்சியிலும் சேரமாட்டேன் என்றார்.

# அ.தி.மு.க, பா.ஜ.க. கட்சிகளுக்கெதிராக பழநெடுமாறன் பிரசாரம் செய்யவுள்ளார்!

(சென்னை)

அ.தி.மு.க., பாஜ.க கூட்டணி தோல்வியுற வேண்டும் எனக் கூறியுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் இந்தக் கூட்டணிக்கு எதிராக தீவிர பிரசாரத்தில் ஈடுபடப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

நீண்ட காலத்திற்கு முன் காங்கிரஸில் இருந்து விலகியது முதல் தமிழர் நலன், உரிமைகள் என தன் பயணத்தை வகுத்துக் கொண்டு விட்ட நெடுமாறன், அரசியல் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

இன உரிமைப் போராட்டங்கள் காரணமாக பலமுறை சிறையைச் சந்தித்திருக்கிறார். சமீபத்தில் அ.தி.மு.க அரசால் பொடா சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலையாகி இருக்கிறார். இந்நிலையில் இத்தனை ஆண்டுகளாக அவரே ஒதுக்கி வைத்திருந்த அரசியலில் மீண்டும் குதிக்கிறார் பழ.நெடுமாறன். நேரடியாகக் களத்தில் இறங்காவிட்டாலும் அ.தி.மு.க , பாஜ.கவிற்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளார்.



நேற்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், மதச்சார்பின்மையைக் காக்க தீவிர தேர்தல் பிரசாரத்தில ஈடுபடப் போகின்றேன். அ.தி.மு.க - பாஜ.க கூட்டணி தோல்வியைத் தழுவினாலே பொடா என்ற கொடிய சட்டங்கள் நிச்சயம் ரத்தாகிவிடும்.

தமிழர்கள் நலன், திராவிட உணர்வுகளைக் கட்டியெழுப்ப தி.மு.க தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணியை வெற்றிபெற வைக்கவேண்டி யது மக்களின் கடமையாகும்.

இந்தக் கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் ஆகியவையும் இடம்பெற்றிருக்க வேண்டுமென பழ நெடுமாறன் தெரிவித்தார்.

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எமது மனப்பூர்வமான ஆதரவு!

## இலங்கை தமிழாசிரியர் சங்கம் பிரகடனம்

சுயநிர்ணய உரிமையுடனான இடைக்காலத் தீர்வை நடைமுறைப்படுத்தும்படி தென்னிலங்கையையும், சர்வதேசத்தையும் வலியுறுத்தி, எமது வாக்குகளைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அள்ளி வழங்குவோம் என இலங்கை தமிழாசிரியர் சங்கம் துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவித்துள்ளது.

ஏன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்குமாறு நாம் கோருகிறோம். யுத்த நிறுத்தம் செய்து, பிரிந்துபோகும் சுயநிர்ணய உரிமையுடனான கூட்டாட்சி அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் எனும் தொனியில் இலங்கை தமிழாசிரியர் சங்கம் வருடாந்த மாநாட்டிலும், சார்க், ஆசிய, பசுபிக் வருடாந்த மாநாட்டிலும் தீர்மானம் முன்வைத்து நிறைவேற்றியது.

இதை அடியொட்டிய ஓர் தேர்தல் விஞ்ஞாபனத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மட்டுமே வெளியிட்டுள்ளது. எனவே, நாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிப்போம் என சங்கச் செயலாளர் த.மகாசிவம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்.

## கணனிக்கூடம் திறப்புவிழா

(சுதுமலை)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினரின் அனுசரணையுடன் கணனிக்கூடத் திறப்பு விழா நாளை இடம்பெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் கு.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக லண்டன் கிளை இணைத்தலைவர் க.சுந்தரராஜாவும், கௌரவ விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், சிறப்பு விருந்தினராக எஸ்.எஸ்.தங்கராசா (கோட்டக்கல்வி அதிகாரி) ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(91)

## கணக்கெடுப்பை மேற்கொள்ள அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள அனுசரணையுடன் நடைபெற்றுவரும் தையல், மனையியல் பயிற்சி நிலையங்களின் 2003 ஆம் வருட வருடாந்தப் பொருட் கணக்கெடுப்பு இதுவரை மேற்கொள்ளாத நிலையங்களின் கணக்கெடுப்பை உடன் நடாத்தி, உரிய அறிக்கையினைத் தனக்கு அனுப்பி வைக்குமாறு தொழிற்துறைத் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(24)

### மோட்டார் போக்குவரத்துப் பிரிவுக்கு

## கடந்த இரு மாதங்களில் மட்டும் ஒரு மில்லியன் ரூபா வருமானம்

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடந்த ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரு மாதங்களில் மட்டும் வாகன வரியாகவும், ஏனைய மோட்டார் போக்குவரத்துப் பிரிவுக் கட்டணங்களாகவும் சுமார் 1 மில்லியன் ரூபா வருமானமாகப் பெறப்பட்டுள்ளது.

சுமார் 3800 வாகனங்கள் இந்தப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இவற்றில் 2200 வாகன உரிமையாளர் மட்டுமே பெப்ரவரிவரை வரியைச் செலுத்தியுள்ளதாகவும் பிரதேச செயலகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் வரி செலுத்துவோரிடம் 10 வீதம் தண்டப்பணம் மேலதிகமாக அறவிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (24)

## நீதிமன்றை அவமதித்த பெண் தடுத்துவைப்பு

நீதிமன்றத்தினுள் பெரும் சத்தமிட்டு, நீதிமன்றினை அவமதித்த பெண்ணொருவரைச் சாவகச்சேரி நீதிமன்றம் தடுத்து வைக்குமாறு பணித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம்பெற்றது. சம்பவத்தின்போது சூடி ஜெயந்தி என்ற பெண்ணே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

வழக்குத் தவணை பிற்போட்டதினால் ஆத்திரமுற்ற இந்தப் பெண்மணி - நீதிமன்றில் பெரும் கூச்சலிட்டு, நீதிமன்றினை அவதூறு செய்தார்.

இந்தப் பெண்மணியைப் பொலிஸார் நீதிமன்றத்தினை அவதூறு செய்தார் என்று குற்றஞ்சாட்டி வழக்குத்தாக்கல் செய்து, தடுத்து வைத்துள்ளனர்.

இவரின் வழக்குத் தவணை நாளைவரை பிற்போடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(29)

## சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

2003 ஆம் ஆண்டு ஒக்டோபரில் தொடங்கிய யாழ். கடலக தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சியைப் பெற்று, வெளியேறிய மாணவர்களின் சான்றிதழ்கள் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்துள்ளதாகவும், அதனைப் பயிற்சியை முடித்துக்கொண்டவர்கள் காரியாலயத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சிநெறிகளுக்கான கொடுப்பனவுகளை போரூட் நிறுவனம் வழங்கியிருந்ததாகவும், மேலும் பயிற்சிநெறிகளில் கலந்துகொள்பவர்களுக்கு நாளொன்றுக்கு 100 ரூபா வீதம் ஊக்குவிப்பு வழங்கப்பட்டு வருவதாகவும் கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

(206)

### சட்டவிரோதமாக

## மண்ணகழ்வோரிடையே மோதல்கள் ஆரம்பம்

(வண்ணை)

அரியாலைப் பகுதியில் சட்டவிரோத மண்ணகழ்வில் ஈடுபடுவோருக்கு இடையில் மோதல்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன.

அரியாலைப் பகுதியைச் சேர்ந்தோர் மண்ணகழ்வில் ஈடுபடாது இருக்க இருபாலை, கோப்பாய்ப் பகுதி உழவு இயந்திர உரிமையாளர்கள் இங்கு மண் அகழ்வில் ஈடுபடுகின்றன.

கடந்த சில தினங்களாக வெளியிடங்களைச் சேர்ந்தோர் கத்தி, வாள்களுடன் வந்து - அரியாலைப் பகுதியில் காவல் கடமையில் இருப்போரை அச்சுறுத்திவிட்டு மண்ணகழ்வில் ஈடுபடுகின்றனர்.

(111)

## நம்பிக்கை இல்லத்தில் தங்கியோர் நிரந்தரத் தீர்வு பெற்றுள்ளனர்

யாழ்ப்பாண சமூக செயற்பாட்டு மையம் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர்களுக்கான தற்காலிக பாதுகாப்பை ஏற்படுத்தும் முகமாக அமைக்கப்பட்ட நம்பிக்கை இல்லத்தில் 80 இற்கும் மேற்பட்டோர் தங்கி நிரந்தரத் தீர்வு பெற்றுள்ளார்கள் என சமூக செயற்பாட்டு மைய ஒழுங்கமைப்பாளர் தெரிவித்தார்.

இங்கு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட பெண்கள், சிறுவர்களும், அநாதரவாக விடப்பட்ட பெண்கள், சிறுவர்களும் மற்றும் நீதிமன்றத்தால் இடைத்தங்கலாக மாற்றப்படும் சிறுவர்களும், பெண்களும், தற்காலிகமாகத் தங்குமிட வசதி கோரும் பாதிப்புக்குள்ளான பெண்களும், சிறுவர்களும், வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களும் இங்கு சேர்க்கப்பட்டு, குறுகிய காலத்திற்குள் அவர்களுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

இங்கு வருபவர்களுக்கு அங்கீகரிககப்பட்ட முறையிலான பதிவுகளுக்கு ஊடாகவும், ஏனைய நிறுவனங்களுடன் வலைப்பின்னல் தொடர்பை ஏற்படுத்தவும், அடிப்படை உடனடித் தேவைகளை நிறைவு செய்வதுடன் மருத்துவ, சட்ட உதவிகளுக்கான வழிகாட்டலும் செய்யப்படுகின்றன.

எனவே, பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெண்கள் உங்கள் சமூகத்தில் இனம்காணும்பொழுது அவர்களுக்கு வேண்டிய உடனடி பாதுகாப்பைப் பெற்றுத் தரும்பொருட்டு எம்முடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். சமூக செயற்பாடு ஒழுங்கமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

## கடலோட்டு பயிற்சிக் கல்லூரிக்கு ஜீ.ரி.இசற் நிறுவனம் நிதியுதவி

(கொக்குவில்)

யாழ். கடலோட்டு இயந்திரவியல் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி நெறிகளை மேற்கொள்பவர்களுக்கான நிதியை, யாழ். அரச அதிபரின் சிபார்சின் பேரில் ஜீ.ரி. இசற் நிறுவனம் வழங்கி இருப்பதாக கல்லூரி அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

உடனடியாக நிதியைப் பயிற்சியாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், அதற்கு உதவி வழங்கிய யாழ். அரச அதிபர் ஜீ.ரி.இசற் நிறுவனத்தினருக்கு கல்லூரி அதிபர் தெரிவித்திருக்கிறார். (206)



எஸ்.பி.கே.யின் 'இயந்திர நண்டுகள்' என்னும் மொழிபெயர்ப்புச் சிறுகதை நூலின் பிரதியை ஆசிரியர் எஸ்.பி.கிருஷ்ணனிடமிருந்து இந்து சமய விவகார அமைச்சின் துணைச் செயலாளர் து.வைத்திலிங்கம் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

## அறிவுறுத்தல் கூட்டம்

(உடுவில்)

மே மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி கொழும்பிலுள்ள பரீட்சைத் திணைகளத்தில் நடைபெறும் என இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

(101)

## பொருட்களை அதிக விற்பனை செய்யும் கிளைகளுக்கு பரிசு

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நுகர்வுப் பொருட்களை அதிகளவில் விற்பனை செய்யும் கிளை முகாமையாளர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்க சங்க நிர்வாகம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் இந்தத் திட்டம் சங்கக்கிளைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

நிவாரணப் பொருட்கள் தவிர்ந்த ஏனைய நுகர்வுப் பொருட்களை அதிகளவில் விற்பனை செய்யும் கிளை முகாமையாளர், விற்பனையாளர் ஆகியோர் மாதாந்தம் கௌரவிக்கப்பட்டு, பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார். (34)

### நல்லூர் பிரதேச செயலர் பிரிவு

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பதினேழு பேர் திடீர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பதினேழு பேருக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் எவ்வித இடமாற்றங்களும் மேற்கொள்ளப்பட முடியாது என முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இடமாற்றம் பெறுவோர் விபரம் வருமாறு -

என்.ஜெயரஞ்சன், ஆர்.குகதாசன், சே.முகுந்தன், ஆர்.ரகுராசன், கே.சதீஸ், சு.சுஜேந்திரன், ஆர். ரஜனிகாந், கே.தர்மிளா, எஸ்.சுபநாதன், கே.விமல்ராஜ், எஸ்.அருட்குமரன், கே.பிரபா, எஸ்.ஜீவனா, கே.பார்த்தீபன், ஜே.யோசப், கே.வேலழகன், பி.கோபிநாத்.

இவர்களை உடனடியாக நியமிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று, தமது கடமைகளைப் பொறுப்பேற்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (111)

## இயேசுவின் திருப்பாடுகள் திருமறைக் கலாமன்றம் ஏற்பாடு

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைச் சித்தரிக்கும் பிரமாண்டமான தயாரிப்பாகிய திருப்பாடுகளின் காட்சி 'காவிய நாயகன்' என்னும் பெயரில் எதிர்வரும் 30, 31 ஆம் திகதிகளிலும், ஏப்ரல் 1, 3, 4, ஆம் திகதிகளிலுமாக 5 தினங்களுக்கு யாழ். பிரதான வீதியிலுள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

தினமும் மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தத் திருப்பாடுகளின் காட்சிக்கு முன்னதாக அருளுரைகளும் இடம்பெறவுள்ளது. இந்த மாபெரும் ஆற்றுகையில் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக 250 இற்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்கின்றார்கள்.

பார்வையாளர்கள் இறுதி நாட்கள்வரை காத்திருக்காமல் ஆரம்ப நாட்களிலேயே இந்தக் காட்சியைப் பார்வையிட வருகைதருவதன் மூலம் நெருக்கடி நிலைகளைத் தவிர்க்க உதவுமாறும், தூர இடங்களிலிருந்து வர விரும்புபவர்கள் - நேரகாலத்துடனேயே ஆசனங்களுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறும் திருமறைக் கலாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



# விளையாட்டு அரங்கம்



## நல்லெண்ணம் தவிர வேறல்ல

அண்மையில் நல்லூர் பிரதேச சகல பாடசாலை தலைவர்கள் கலந்து கொண்ட தடகளப் போட்டியொன்றைப் பார்வையிடும் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. இந்தப் போட்டிகளில் ஏறத்தாழ நாற்பது பாடசாலைகளின், பல வயதுப் பிரிவுகளைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள். இந்தப் போட்டிகளில் தம் திறமையைக் காட்டும் வீர, வீராங்கனைகள் அகில இலங்கை மட்டத்தில் சாதனை படைக்கும் அளவிற்குச் செல்லக் கூடியவர்கள் என்பதையும் அறிந்துகொள்ள முடிந்தது.

அந்தச் சிறந்த நோக்கத்தையும், இலக்கினையும் கொண்டே போட்டி ஏற்பாட்டாளர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் செயற்பட்டிருந்தார்கள் என்பதையும், நன்குணர முடிந்தது. மொத்தத்தில் நோக்கம் வெற்றியடையும் வகையில் இந்தத் தடகளப் போட்டிகள் நடைபெற்று முடிந்தன. என்றாலும், இது இன்னமும் கூடியவெற்றியைக் காட்டியிருக்கும். இன்னும் சில யின் அழகும்கூட மைதான உடைகளில் இருக்கிறது என்பதையும் மனதிற்கொள்ள வேண்டும்.

மேலும், பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் இன்னும் சில விடயங்களில் கூடிய கவனம் செலுத்துதல் அவசியம். குறிப்பாக இரண்டு விடயங்களைக் கூறலாம். ஒன்று ஓட்டத் தடத்தில் ஓடுவது. அது தொடர்பான விதிகளை அறிந்திருப்பது. இன்னொன்று உபகரணங்களைச் சரியாகக் கையாள்வது. சிறப்பாக அஞ்சலோட்டத்தின்போது, கோல்களை மாற்றிக்கொள்வது. இந்தவகையில் ஒரு சில பாடசாலை வீர, வீராங்கனைகள் இவற்றைச் சரியாகப் பின்பற்றியமையைக் காணக்கூடியதாக இருந்தது. சில அடிப்படை விடயங்களை மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப் பெரிய மைதானம் தேவையில்லை. அதிபர், ஆசிரியர்கள் மனம்தான் வேண்டும் என்று கூறுவதில், பிழை ஏதும் இருக்காதென்பதையே நம்புகிறோம். ஏனெனில், ஆசிரியர்களின் ஆர்வமும் இதற்கு துணைசெய்யும். மற்றது பாடத்திட்டம் இவைபற்றி விலாவாரியாக எடுத்துக் கூறு விடயங்களில் கூடிய அக்கறை காட்டியிருந்தால் என்று எண்ணத் தோன்றியது.

பொதுவாக, ஒரு சில பாடசாலைகளின் அதிபர்களாவது, விண்ணப்பங்களைச் சரிவரப் பூர்த்தி செய்யவேண்டும் என்ற அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதை, உணரமுடிந்தது. ஏனோதானோ என்று நிரப்பியிருந்தார்கள் என்றாலும், பிழையில்லை. விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் விண்ணப்பப் பத்திரங்களை அரைகுறையாக நிரப்பி இருந்தாலும், கையெழுத்திட்டு, உறுதிப்படுத்துபவர் அதிபர் என்ற வகையில் முழுப்பொறுப்பும் அவரைச் சார்வது இயல்பானதே. இதன் தொடர்ச்சியாக ஏற்படும் மைதானக் காரியாலயச் சிக்கல்கள் எத்தகையவை, போட்டியாளர் பாதிக்கப்படும் சந்தர்ப்பம் உயர்ந்தளவு என்பதை இதனோடு தொடர்பு கொண்டவர்கள் நன்கு உணர்வார்கள்.

இன்னொன்றையும் இங்கு குறிப்பிட வேண்டும். நிறைந்த பயிற்சி இருந்தால், அந்தந்த நிகழ்வுகளில் உயர்தகைமை காட்டியிருக்கக்கூடிய பல வீர, வீராங்கனைகளை இனம்காணக் கூடியதாக இருந்தது. இருந்தாலும், போதுமான பாடசாலைப் பௌதீக வளங்கள் கிடைக்கின்றனவா என்ற வகையில் நோக்கில் - அதிபர்களையோ, ஆசிரியர்களையோ நோக்கி சுட்டி விரலை நீட்டி விடமுடியாது. என்றாலும், இன்று ஓரளவு சீரானநிலை மற்றும் விளையாட்டுத்துறை ஆர்வம் முதலியன வளர்ந்து வரும்நிலையில், சிறார்களை நிகழ்வுகளில் கலந்துகொண்டும் மைதான உடைகளில் களம் இறக்குவது கூடிய பொருத்தமாக இருக்கும். அது வீர, வீராங்கனைகளின் பெறுபேற்றை உயர்த்தவும் உதவியாக இருந்திருக்கும். இந்த விடயத்தில் ஆசிரியர்கள் மட்டுமன்றி, பெற்றோரின் பங்களிப்பும் முக்கியமானதாகும்.

நிலைமைக்கேற்ப சிறார்கள் பாடசாலைச் சீருடையில் மைதானத்தில் இறங்கி நிகழ்வுகளில் கலந்துகொண்டமை குற்றமல்ல. இருந்தாலும், ஒரு தடகளப் போட்டி கிறது என்பதும் ஒன்று. விளையாட்டு ஆசிரியர்கள் இல்லை என்று கூறுவது ஒரு நொண்டிச்சாட்டாகவே இருக்கும். இருக்க வேண்டியது விளையாட்டு ஆசிரியரல்ல. நல்ல மனத்தைக் கொண்ட ஆசிரியர்களே.

இவை எல்லாவற்றிக்கும் மேலாக ஒன்று உள்ளது. மைதானத்தில் விளையாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றுதல். அந்த வகையில் இந்த பாடசாலை வீர, வீராங்கனைகள் தான் உயர் தகைமையை வெளிப்படுத்தியிருந்தமை மிகப் பெருமையாக இருந்தது. ஒரு சில சலனங்கள் எவ்வகையிலும், பெரிதுபடுத்தக்கூடியதல்ல. அந்த வகையில் இந்தப் போட்டிகளுக்கு வீர, வீராங்கனைகளைத் தயார் படுத்திய பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் பெரும் பாராட்டுக்குரியவர்தான்.

இறுதியாக அண்மையில் படித்த ஒரு செய்தியையும் குறிப்பிட்டு முடிக்கலாம் என்று தோன்றுகிறது. 1964 ஆண்டு - பதினெட்டாவது ஒலிம்பிக் போட்டிகள் யப்பானில் ரோக்கியோ நகரத்தில் நடந்தேறின. இதில் இலங்கையின் சார்பில் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்டவர், 28 வயதான ரணதுங்க ஜயசேகர கருணானந்த என்பவர். இவரது ஓட்டம் 75 ஆயிரம் ரசிகர்கள் முன்னிலையில் ஆரம்பமாயிற்று. இவர் இந்த ஓட்டத்தில் பெற்ற இடம் இருபத்தொன்பதாவது முதலாதாக வந்தவர் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த பிலிமில்ஸ். அவர் தனது ஓட்டத்தை முடித்த பின்னும், இன்னும் ஆறு நிமிட ஓட்டம் இலங்கை வீரருக்கு மீதம் இருந்தது. இவரைத் தாண்டி முன்னணி வீரர்கள் பலமுறை தாண்டிப் போனவர்கள். சில பின்தங்கிய வீரர்கள் ஓட இயலாமல் இடையில் விலகிக் கொண்டார்கள். ஆனால், கருணானந்த அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. முதலிடங்கள் பெற்றவர்கள் ஓட்டத்தை முடித்து, ஆறாவது நிமிடம் இவர் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தை நிறைவு செய்தார். ஒவ்வொரு சுற்றையும் முடிக்கும்போது, அந்த அரங்கமே இடிந்துவிழும் அளவிற்கு 75 ஆயிரம் ரசிகர்கள் எழுந்து நின்று ஆரவாரம் செய்தார்கள். தான் இப்படி ஒரு ஆரவாரச் சத்தத்தை எங்குமே கேட்டதில்லை என்றார் றோய்ட்டர் நிருபர். நிறையவே ஜப்பானிய ரசிகர்கள் இவருக்கு பரிசுகள் வழங்கினர். பாடசாலைச் சிறார்கள் கொத்துக் கொத்தாக மலர்கள், அழகிய பொம்மைகள் என்று பரிசளித்தார்கள். இன்று நாற்பது வருடங்களின்பின் இந்தச் சம்பவத்தை நினைவுகூரும் கட்டுரை ஆசிரியர்கள் இந்த நிகழ்வில் இலங்கை தங்கப் பதக்கம் பெற்றிருந்தாற்கூட இவ்வளவு கீர்த்தி ஏற்பட்டிராதென்று முடிக்கிறார். எமது பள்ளிக்கூடச் சிறுவர்கள் இவரது மனப்பாங்கை நிச்சயம் புரிந்துகொண்டிருப்பார்கள். அதன்படி விளையாட்டை முன்னெடுத்துச் செல்வார்கள் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

**- ஜோசப் கிருஷ்ணா -**

## தப்பென்று எதைச்சொல்வது



டுவெய்ன் சேம்பர்ஸ்

டுவெய்ன் சேம்பர்ஸ் 100 மீற்றர் ஆண்கள் குறுந்தூர ஓட்டத்தில் ஐரோப்பிய சம்பியன் பட்டம் வென்றவர். இவர் ஊக்க மருந்து பாவித்தவர் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றல்களிலிருந்து இரண்டு வருடம் இடைநிறுத்தி வைக்கப்பட்டவர். அத்தோடு, இவரது விளையாட்டுலக வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டதாகவே கருதப்பட்டது. ஆனாலும், அவர் சார்பில் குரல் தரவல்ல ஒருவர் கருத்துக் கூறும்போது, அப்படி ஒன்றும் அவர் முடிவு செய்துவிடவில்லை என்று கூறியிருக்கிறார்.

சேம்ப்ர்ஸ் - தான் விடயம் அறியாது உடகொண்ட ஒரு மருந்தே தன்னைப் பாதித்தது என்றும், தான் அறிந்து அந்தத் தவறைச் செய்யவில்லை என்றும் ஏற்கனவே கூறியிருந்தார். இவரது அதிகாரி கூறுகையில் - ஒரு விளையாட்டு வீரன் - ஒவ்வொரு செக்கனும் கண்ணுக்குள் எண்ணெயை விட்டுக்கொண்டு இருக்க முடியாது. இது எதிர்பாராமல் ஏற்பட்ட தவறு. சம்பந்தப்பட்டவர்கள் வீரர்கள் மீதான சோதனைகளில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். பரிசோதனையின் பரிமாணங்களையும் விரிவு படுத்தவேண்டும் என்றிருக்கிறார்.

சேம்பர்ஸ் பற்றிக் கூறும்போது அதிகாரி - அவர் தெரிந்து எடுத்திருந்தால், அது மன்னிக்க முடியாதது. ஆனால், அப்படியல்ல என்பதால், நான் அவர் பக்கம் நிற்கிறேன் என்று கூறியுள்ளார். உடலில் காணப்படுவது ஒன்று அவரைக் குற்றவாளியாக்கியது என்பது ஏற்றுக்கொள்ளமுடியாதது. இந்தவகையில் எதையுமே உள்ளெடுக்ககூடாது என்பதே அவர்களின் வாதம் போல தெரிகிறது. ஆனால், அது ஏற்றுக் கொள்ளமுடியாதது. வீரர்கள் கடுமையான பயிற்சி செய்பவர்கள். எனவே, உடல் வலுவை அவர்கள் இழப்பது அதிகம். எனவே, அதனை ஈடுசெய்ய சிலவற்றை உள்ளெடுப்பார்கள். இது தொடர்பில் நிறைய ஆய்வுகள் தேவை. இப்போதுள்ள பிரச்சினை என்னவென்றால் - சேம்பர்ஸுக்கு ஏற்பட்டது போன்று இன்னும் பல வீரர்களுக்கு ஏற்படாமல் இருக்க என்ன செய்யவேண்டும் என்பதேயாகும் என்கிறார் அவர்.

**- மக்டலின் -**

**சர்வதேச ஒருநாள் போட்டி ஆட்டம் ஒன்றின் போது - இரண்டு அணிகளுமாகச் சேர்ந்துபெற்ற அதிகூடிய ஓட்டங்கள் வரிசையில் இந்தியா - பாகிஸ்தான் பெற்ற ஓட்டங்கள் (693) முதன்மை வகிக்கின்றது. இவ்வாறான உயர்ந்த பட்ச ஓட்ட எண்ணிக்கைத் தரவுகள் வருமாறு.**

| மொத்தம் | இலக்கு | ஓவர் | நாடு | ஓட்டங்கள் | எதிர் | நாடு | ஓட்டம் | நடைபெற்ற இடம் | ஆண்டு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 693 - | 15 | 100 | இந்தியா | 349/7 | Vs | பாக். | 344/8 | கராச்சி | 2004 |
| 664 - | 19 | 99.4 | இலங்கை | 349/9 | Vs | பாக். | 315 | சிங்கப்பூர் | 1995\1996 |
| 662 - | 17 | 99.3 | மே.இ.தீவு | 333/7 | Vs | இல. | 329 | சார்ஜா | 1995\1996 |
| 660 - | 19 | 99.5 | பாகி. | 371/9 | Vs | இல. | 289 | நைரோபி | 1996\1997 |
| 656 - | 10 | 99.1 | தெ.ஆ | 326/3 | Vs | அவுஸ். | 330/7 | போட் எலிசபெத் | 2001\2002 |
| 655 - | 19 | 97 | நியூசிலாந்து | 349/9 | Vs | இந்தியா | 306 | ராஜ்கோட் | 1999\2000 |
| 652 - | 12 | 100 | இலங்கை | 398/5 | Vs | கென்யா | 254/7 | அஸ்கிரிய | 1995\1996 |
| 651 - | 13 | 99.3 | இங்கிலாந்து | 325/5 | Vs | இந்தியா | 326/8 | லோட்ஸ் | 2002 |
| 650 - | 15 | 100 | அவுஸ். | 349/6 | Vs | நியூசிலாந்து | 301/9 | கிறைஸ்ட் சேர்ச் | 1999\2000 |
| 649 - | 9 | 97.4 | மே.இ.தீவு. | 324/4 | Vs | இந்தியா | 325/5 | அஹமதா பாத் | 2002\2003 |
| 646 - | 16 | 98.4 | பாகி. | 329/6 | Vs | இந்தியா | 317 | ராவல்பிண்டி | 2004 |

# என்ன மென்மை! என்ன சுகம்

அரசியல்வாதிகள் குழப்பவும் கூடாது, குழம்பவும் கூடாதுஎன்று ஒரு சிந்தனை தோன்றுகிறது. இந்திய பாகிஸ்தான் ஒரு நாள் இருதரப்பு உணர்வலைகள் ஊடகங்கள் ஊடாக சுடச்சுட வந்துகொண்டிருக்கின்றன.

இம்ரான்கான் எனும் பதினெட்டு வயது இளைஞன் ஒருவன், சச்சின் தன்னருகில் வந்து கையசைத்துச் சென்றதற்கே பிரமித்துப்போய் நிற்கிறான். சச்சின் எனது ஹீரோ என்று துள்ளிக்குதிக்கிறான். நான் இதுவரையில் ரி.வியில் தான் அவரைக் கண்டேன். இன்று நேரில் கண்டேன்.



இம்ரான் கபில்
"இனியெல்லாம் சுகமே"

அடுத்தமுறை அவருடன் உரையாடும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நம்புகிறேன் என்கிறான்.

உயர்ரக தரைவிரிப்புகள் விற்பனை செய்பவர் தாஹீர் அஹமட். அவர் கூறுகிறார் - 'நீண்டகாலம் இந்திய கிரிக்கெட் அணியைச் சந்திக்கும் வாய்ப்பை நாங்கள் இழந்துவிட்டோம். எல்லைக்கு இருபக்கமும் வாழும் மக்களிடையே எந்தவித பிணக்கும் இல்லை என்பதை, இருபக்கத்து அரசியல் தலைவர்களும் உணர்ந்து கொண்டால்போதும் என்கிறார் தாஹிர்.

மறுபுறம் இந்தியர்கள் சார்பில் உணர்வோட்டங்களும் அப்படித்தான் இருக்கின்றன. அதுவும் கங்கூலி 'அந்த மாதிரி' புளகாங்கிதம் அடைந்துபோய்க் கிடக்கிறார்.

நாங்கள் எதிர்பார்க்காத அளவிற்கு பாகிஸ்தான் மக்கள் அன்பைச் சொரிகிறார்கள். அவர்கள் காட்டும் அன்பை என்னென்று சொல்வது என்று குரல் தளதளக்கிறார்.

கராச்சி மைதானத்தில் ரசிகர்கள் எழுந்துநின்று இந்திய அணியை வரவேற்ற பாங்கு, இந்திய வீரர்களை நிரம்பப் பாதித்துள்ளது. பாதுகாப்புக் குறித்துப் பயந்தவர்கள், அரசயல் தளம்பல் நிறைந்த நாடுகள் என்ற முத்திரை பதிக்கப்பட்டவர்கள், சிறிது சலனப்பட்டவர்களாகவே இருந்திருப்பார்கள். ஆனால், பாகிஸ்தான் மக்கள் இந்தியர்களின் மனதை இப்படிக் கொள்ளை கொண்டு விடுவார்கள் என்று கங்கூலியும், தோழர்களும் நினைத்திருக்கமாட்டார்கள்தான்.

இந்திய அணியின் பயிற்றுநர் ஜோண்ரைட்டும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. கராச்சி ரசிகர்கள் அற்புதமானவர்கள். நடுநிலைமையானவர்கள். ஏற்றுக்கொள்ளத்தக்கவர்கள் என்று கூறியிருக்கிறார் ரைட். உண்மைதான் இருவருமே தம்மிடம் அணுவாயுதம் இருக்கிறது என்றுகூறி, முறைத்துக்கொள்ளும் அளவிற்கு உக்கிரமான அரசியலில் கருத்து வேறுபாடுகள் கொண்டவர்கள்.

உறவேவேண்டாம். அப்படித்தான் உறவென்றாலும், அது பகை உறவாகத்தான் இருக்கமுடியும் என்று போர் முழக்கம் செய்பவர்கள். ஆனால், நாங்கள் காண்பது இன்னொரு பக்கமாகவல்லவா இருக்கிறது. அதிருப்தியாக ஒருவார்த்தைகூட இல்லை. ஒரு சிறுசெயல்கூட இல்லை. அன்பு எல்லாமே, அன்பென்று அட்டகாசமாக ஓடிக்கொண்டிருக்கிறது இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர்.

பாதுகாப்புப் பற்றி நாங்கள் சிறிது அசசம கொண்டது உண்மைதான். அதேவேளை, பாகிஸ்தான் சரியான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று எமக்குத் தெரியும். ஆனால், இத்தகையதொரு பாதுகாப்பு ஏற்பாட்டை நாங்கள் எதிர்பார்த்ததே இல்லை. எல்லாமே அதி உச்சம்தான் என்கிறார் கங்கூலி தொடர்ந்து. உலகத்தில் சமரசம் உலாவும் இடம் ஏதோ ஒன்று என்பார்கள். இல்லை விளையாட்டு மைதானமும்தான் என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்திய - பாகிஸ்தானிய கிரிக்கெட் சார்பான அத்தனை பேரும். அதுவும் 'வாருங்கள் வாருங்கள்' என வருந்தியழைத்த பாகிஸ்தான் விருந்தோம்பலின்- உச்சத்துக்கே போய்விட்டதுபோலத் தெரிகின்றது.

இந்தப் போக்கு தளர்வின்றித் தொடருமாயின், தென்னாசியாவில் எதிர்பார்க்கப்படும் பாரிய அமைதியை நோக்கி, இரண்டு நாடுகளும் வேகமாக நடைபோடும் என்று நிச்சயம் நம்பலாம். பாகிஸ்தான் தன் இரண்டு கரத்திலும் இந்தியாவின் கரங்களைப் பற்றிக் கொண்டது. இனி அதனை இறுகப் பற்றிக் கொள்வது இந்தியாவின் பொறுப்பு.

**- காவேரி கிருஷ்ணா-**

# அடங்கியது ஆணவம்

தென்னாபிரிக்க அணி மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான சுற்றுப்போட்டில், ஒரு நாள்போட்டித் தொடரிலும், டெஸ்ட் போட்டித் தொடரிலும் வெற்றி கொண்டமை அனைவரும் அறிந்ததே.

இந்த வெற்றிப் பாதையிலே - தென்னாபிரிக்கா தொடர்ந்து சென்று கொண்டிருக்கப் போகிறது. அவுஸ்ரேலியா அணிக்கு நிகராக - தென்னாபிரிக்க அணி விளங்கப்போகிறது என்று எண்ணினார்கள் தென்னாபிரிக்க கிரிக்கெட் ரசிகர்கள்.

அவர்களின் எண்ணங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க முனைந்தார்கள் தென்னாபிரிக்க அணியினர். அந்தசெயல் வடிவம், நியூசிலாந்து அணியுடனான ஆறு ஒரு நாள் போட்டியினைக் கொண்ட ஒருநாள் தொடரின், முதல் ஆட்டத்தில் மட்டுமே பிரகாசித்தது.

பௌர்ணமியாய் ஒளிவிட்ட தென்னாபிரிக்க அணியின் தேய்பிறைக் காலம் போல, நியூசிலாந்து அணியுடனான ஐந்து ஒருநாள் போட்டிகளிலும், தென்னாபிரிக்காவின் வெற்றி ஒளி இழந்து சென்றுகொண்டிருந்தது.

முதல் போட்டியிலும் தென்னாபிரிக்கா அணி, சற்றுக் கடினமாகவே வெற்றி இலக்கை அடைந்தது. இரண்டு பந்துகள் மீதம் இருக்கையில் 225 என்ற வெற்றி இலக்கை ஐந்து விக்கெட்டுக்களை மட்டும் இழந்து, தென்னாபிரிக்கா பெற்றுக் கொண்டது. என்ரினியும், குளுஸ்னரும் முன்னதாகச் சிறப்பாகப் பந்துவீசி நியூசிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தியிருந்தமையும், தென்னாபிரிக்காவின் வெற்றிக்குக் காரணமாய் இருந்தது.



"அவர்கள் என்ன கொம்பா"

இந்த ஒருநாள் போட்டியில் பெற்ற வெற்றியே முதல் வெற்றியாகவும், ஆறு போட்டிகள் கொண்ட தொடரின் இறுதி வெற்றியாகவும் அமைந்துவிட்டது. மற்றைய ஐந்து போட்டிகளிலும் நியூசிலாந்து அணியே வெற்றிபெற்று 5:1 என்ற அடிப்படையில் தொடரைக் கைப்பற்றியது.



ஸ்ரீபன் பிளெமிங்
"தானைத் தலைவன்"

நியூசிலாந்து வெற்றிபெற்ற ஐந்து போட்டிகளில் இரண்டு போட்டிகள் மழை காரணமாக ஓவர்கள் குறைக்கப்பட்ட போட்டிகளாகும்.

38 ஓவராகக் குறைக்கப்பட்ட ஒரு போட்டியில், நியூசிலாந்து ஐந்து ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. 255 ஓட்டங்கள் எடுத்தால், வெற்றி என்றநிலையில் 249 ஓட்டங்கள்வரையும் தென்னாபிரிக்கா துரத்தியுள்ளது.

இந்தப் போட்டியில் மூன்று பந்தில் 18 பெறவேண்டும் என்றநிலை தென்னாபிரிக்க அணிக்கு இருந்தது. ஆடுகளத்தில் நின்றவர் பொலக். இவர் இரண்டு பந்துகளில் இரண்டு சிக்ஸரினை விளாசி, 12 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ஒரு பந்து மீதமிருந்தது ஆறு ரன்கள் எடுத்தால், வெற்றி பொலக்கால் ஒரு ரன்னை மட்டுமே பெறமுடிந்தது.

இன்னொரு போட்டியிலும் மழைவந்து குறுக்கிட்டமையால், 33 ஓவர்கள் விளையாடப்பட்டது. 193 ஓட்டங்களை நியூசிலாந்து பெற்றது. இதன் பின்னரும் மழை. ஆகையால், 29 ஓவரில் 178 ஓட்டங்கள் பெறவேண்டி தென்னாபிரிக்க அணிக்கு நிர்ணயம் செய்யப்பட்டது.

கடைசி ஓவரில் 20 ஓட்டங்கள் பெறவேண்டும். தென்னாபிரிக்க அணி 17 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இரண்டு ரன்களால் நியூசிலாந்து வெற்றிபெற்றது.

இந்த இரண்டு ஆட்டங்களும் வெற்றி, தோல்வி யார் பக்கமென்று இறுதிவரை நிர்ணயம் செய்யமுடியாதபடி அமைந்தன. இரு அணியின் வீரர்களும், தமது அணியின் வெற்றிக்காக இறுதிவரை சளைக்காமற் போராடியுள்ளார்கள்.

நியூசிலாந்து அணி வெற்றிபெற்ற மற்றைய மூன்று போட்டிகளிலும், தென்னாபிரிக்க அணியே முதலில் மட்டை வீசியுள்ளது. இந்த மூன்று போட்டிகளும் எந்த விதமான குறுக்கீடுகளும் இன்றி, 50 ஓவர்களாகவே நடைபெற்றன.

முதல் போட்டியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா - அடுத்தபோட்டியில் 254 ஓட்டங்களை நியூசிலாந்தின் வெற்றிக்கு நிர்ணயித்தது. நியூசிலாந்து அணி அந்த வெற்றி இலக்கை 45.1 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக்கொண்டது.

இன்னொரு போட்டியில் 259 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது தென்னாபிரிக்க அணி. அந்தப் போட்டியை 49 ஆவது ஓவரில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து பெற்றுக் கொண்டது நியூசிலாந்து அணி.

இந்த இரண்டு போட்டியிலும் துடுப்பாட்டக்காரர்கள் நன்றாகவே விளையாடியுள்ளனர். இரண்டு அணியின் வீரர்களும் பந்து வீச்சாளர்களின் கையை மேலோங்க விடவில்லை.

ஆறாவது போட்டி அந்தக் குறையைத் திருப்தி செய்தது. ர.்.பி, ஓரம் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைப் பெற்று, 190 ஓட்டங்களை. 50 ஓவரில் நியூசிலாந்து பெற்றால், வெற்றி என்றநிலைக்குக் கொண்டுவந்தனர்.

அந்த இலக்கினை 46 ஆவது ஓவரில்தான் நியூசிலாந்து அணியால் பெறமுடிந்தது. தென்னாபிரிக்கா அணி சார்பில் - என்ரினி நன்றாகப் பந்து வீசினார். ஆனால், விக்கெட்டினைச் சரிக்க முடியவில்லை. ஐந்து விக்கெட்டுக்களால் நியூசிலாந்து வெற்றிபெற்றது.

நியூசிலாந்து அணி தொடரைக் கைப்பற்றியிருந்தாலும், இரண்டு அணிகளும் நிர்ணயிக்கப்பட்ட ஓவர் வரை துடுப்பெடுத்தாடியுள்ளன. அதாவது, அனைத்து விக்கெட்டுக்களையும் சரித்ததாக எந்தப் போட்டியும் அமையவில்லை.

இந்த நிலையை கருத்திற்கொண்டு, பந்து விச்சாளர்களைக் குறைகண்டு விடமுடியாது. ஏனெனில், 260 இற்கு மேல் ஓட்ட எண்ணிக்கையை எந்தவொரு அணியாலும் பெற்றுவிட முடியவில்லை.

நியூசிலாந்து அணி சார்பில் பிளெமிங் மட்டுமே ஒரு போட்டியில் சதம் ஒன்றைப் பெற்றுள்ளார். பப்ஸ், மார்ஷல், ஹரிஸ், ஸ்டைரிஸ், மக்மில்லன் ஆகியோர் அரைச் சதத்தைப் தொட்டுள்ளனர்.

தென்னாபிரிக்கா அணி சார்பில் சிமித் கலிஸ், றுமேஸ்ட், நிக்கிபோஜி, சிப்ஸ் ஆகியோரே அரைச் சதத்தைப் பெற்றுள்ளனர்.

**- வெண்மதி -**

# ஜொனெக்ஸ் விளையாட்டுப் புதிர்

01. வடக்கில் பெரும் போர் என அழைக்கப்படும் கிரிக்கெட் ஆட்டம் இந்த வருடம் எத்தனையாவது முறையாக நடைபெறுகிறது?
02. எதென்ஸ் ஒலிம்பிக் 100 மீற்றர் மகளிர் பிரிவில் தங்கப் பதக்கம் இந்த முறையும் எனக்கே என்கிறார் சிட்னியில் தங்கம் வென்றவர் அவர்யார்?
03. சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் இதுவரையும் இரண்டு அணிகளுமாகப் பெற்ற அதிகூடிய ஓட்டங்கள் எத்தனை?



விளையாட்டுப் புதிர் - 04

**விண்ணப்பப்படிவம்.**

முழுப்பெயர்:- ..................................................

முகவரி:- ..................................................

01.

02.

03.

விடைகள் எழுதப்பட்ட இவ் விண்ணப்பப் படிவத்தைப் பின்வரும் முகவரிக்கு, 26.03.2004 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக அனுப்புங்கள் அல்லது நேரில் கையளியுங்கள்.

*விலாசம்:- விளையாட்டுப் புதிர் - இல. 04,*
*நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

## விளையாட்டுப் புதிர் இல. 03 இன் விடைகள்

1) ஷேன்வோண்
2) யாழ். மத்திய கல்லூரி, சென்.ஜோனஸ் கல்லூரி.
3) இங்கிலாந்து.

**பரிசு பெற்றவர்**
கு.சுகந்தி
பாப்பையா கடை அருகாமை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

அனுசரணை:- ஜொனெக்ஸ் மல்ரி பலஸ்
YONEX MULTI PALACE
76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-2227648, 0777166894.

தேர்தல் களம் - 2004

பரணி

# தமிழ்ப் பற்று உள்ளவர்களே நாடாளுமன்றம் செல்லவேண்டும்

தந்தை செல்வா சட்டமேதை கறுப்புச் சட்டை போட்டு உழைத்தார். பின்னர் அதைத் தியாகம் செய்தார். நானும் ஒரு சட்டத்தரணி தான். ஆனால், கறுப்புச் சட்டை போடாமல் தியாகம் செய்துள்ளேன் என்று கூறுகின்றார் ஒருவர். இவர் கறுப்புச் சட்டைபோட்டு சட்டத்தரணியாகத் தொழில் புரிந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பார்த்தேன். ஒரு தொலைக்காட்சி நாடகம்தான் என் மனதில் தோன்றியது.

அதிலே ஒரு சட்டத்தரணி வருகின்றார். கறுப்புச் சட்டையை விட்டுவிடலாம் என்று பாடுபடுகின்றார். ஆனால், அவரால் முடியவில்லை. கறுப்புச் சட்டையைப் போட்டுக் கொண்டு தன் கட்சிக்காரரையே மாட்டித் தண்டனையையும் பெற்றுக்கொடுக்கும் வாதத்திறமையுள்ளவர் அவர். இவரும் கறுப்புச் சட்டை போட்டால் அந்த நாடகச் சட்டத்தரணி போல் தான் காட்சியளிப்பார். வாதத்திலும் அவரைப் போல்தான் வாதிடுவார் என்பது நாடகத்தைப் பார்ப்பவர்களுக்குப் புரியும்.

இவர் அண்மையில் தெரிவித்த ஒரு கருத்து இங்கு கூர்ந்து நோக்கற்பாலது. நாங்கள் திருமலையில் போட்டியிடவில்லை. ஏனெனில், நாம் அங்கு போட்டியிட்டால் தமிழர் பிரதிநிதித்துவம் குறைந்துவிடும். ஆனால், யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதால் தமிழர் பிரதிநிதித்துவம் குறையமாட்டாது. எனவே தான் நாங்கள் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகின்றோம். எவ்வளவு திறமையான வாதத்தை மக்கள் முன்வைத்துள்ளேன். நான் எவ்வளவு பெரிய சட்டத்தரணி தமிழர் பிரதிநிதித்துவத்தின் அக்கறையை மக்கள் விளங்கிக்கொள்வார்கள் என்று நினைக்கக்கூடும்.

தமிழர் பிரதிநிதித்துவம் என்றால் என்ன? தமிழர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் கொள்கைகள் எப்படி இருந்தாலும் கவலை கொள்ளாது எண்ணிக்கையில் தமிழர்கள் அதிகம் பேர் நாடாளுமன்றம் சென்றால் போதுமா? போதும் என்பதுதான் இந்தச் சட்டத்தரணியின் வாதமா? ரணில் தலைமையில் தமிழர்கள் போட்டியிடுகின்றார்கள். சந்திரிகா தலைமையில் தமிழர்கள் போட்டியிடுகின்றனர். இதைவிட வேறு கட்சிகளிலும் தமிழர்கள் போட்டியிடுகின்றனர். இவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்தால் வெற்றிபெற்றால், தமிழர் பிரதிநிதித்துவம் அதிகரிக்குமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

நாடாளுமன்றத்திற்குச் செல்வதால், தமிழர்களின் உரிமைகளைப் பெறமுடியும் என்று யாராவது கூறமுடியுமா? இன்றல்ல நேற்றல்ல அன்றே தந்தை செல்வா கூறியிருந்தார். நாம் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் செல்வதால் மாத்திரம் உரிமைகளைப் பெற்றுவிட முடியாது. நாம் நாடாளுமன்றத்தை ஒரு மேடையாகப் பாவிப்போம். ஆனால், நாம் எமது உரிமைகளைப் போராடித்தான் பெற வேண்டும். எனவே, தமிழினத்திற்கு எதிரானவர் நாடாளுமன்றத்திற்குச் செல்லக்கூடாது என்பதுதான் முதலில் கவனத்திற்கு எடுக்கப் படவேண்டியதாகும்.

வெறும் எண்ணிக்கையில் தமிழர்கள் என்று கொள்ளாது தமிழின உணர்வு உள்ளவர்கள் நாடாளுமன்றம் செல்லவேண்டும். தமிழின உணர்வு இல்லாதவர்கள் நாடாளுமன்றம் சென்று தாங்கள்தான் தமிழர்களின் பிரதிநிதிகள் என்று சொல்லும்பொழுது நாம் போராட்டம் நடத்த முடியுமா? எனவே, தமிழின உணர்வு இல்லாதவர்கள் முதலில் நாடாளுமன்றம் செல்லாது தடுக்கப்படவேண்டும். யார் நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்பதிலும் பார்க்க யார் நாடாளுமன்றம் செல்லக்கூடாது என்பதில்தான் தமிழ் மக்கள் முதலில் கவனம் செலுத்த வேண்டும் என்பது தந்தையின் கருத்தாகும்.

இவ்வாறு தந்தை செல்வா கூறியதைப் பொறுக்காத மாற்றுக் கட்சியினர் என்ன கூறினார்கள்? ஆகத் தமிழரசுக் கட்சியினருக்குத் தான் தமிழ் உணர்வு உண்டா? நாங்களும் தமிழர்கள்தானே. எங்களுக்கும் தமிழ் மொழி மேல் பற்று உண்டு என்று கூறுவார்கள். சங்கரி போன்ற சிங்களத் தலைமையை ஏற்ற வேட்பாளர்கள் இவ்வாறுதான் தங்கள் பரப்புரையைச் செய்தன. காக்கைவன்னியன் யார்? எட்டப்பன் யார்? இவர்கள் தங்களை தமிழர்கள் என்று கூறிக்கொண்டுதானே காட்டிக் கொடுத்தனர். எனவே, காட்டிக்கொடுப்போரும் துரோகிகளும் நாடாளுமன்றம் செல்லக் கூடாது. கொள்கை வழி நிற்பவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பக்கூடாது. இதுதான் தந்தை காட்டிய வழி இன்று தமிழ் மக்களுக்குத் தேவையான வழி இதுதான்.

அறவழியில் தந்தை போராட்டம் நடத்தினார். போராட்டம் தமிழ் மக்களின் தாயகத்திலே நடந்தது. நாடாளுமன்றத்திலே தந்தையும் அவரது அணியினரும் இருந்தனர். இன்று ஆயுதப்போராட்டம் - உலகம் வியக்கும் வண்ணம் நடைபெற்றுள்ளது. நசுக்கிவிடலாம் தமிழர்களின் உரிமைக் குரலை என்று அறப்போராட்டத்தை ஆயுதப்படைகள் மூலம் முறியடித்தனர். ஆட்சியாளர்களால் தமிழ் மண்ணில் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடியது. தமிழ் மக்கள் அடங்கமாட்டார்கள். சிங்கள ஆட்சியாளர்களின் ஆயுத அடக்குமுறையை ஆயுதத்தால் முறியடித்தார்கள் தமிழ் மக்கள். தமிழ் மண்ணின் பெரும் பகுதி மீட்கப்பட்டது. இறுதியில் சமாதானப் பேச்சு வார்த்தை தொடங்கியது. தமிழர்கள் பலமாக ஒரு குடையின்கீழ் போராடினார்கள். இதற்கு உறுதுணையானவர்களே நாடாளுமன்றத்திலே இருக்கவேண்டும். சிங்கள மக்கள் தங்களுக்குத் தேவையானது சமாதானமா? யுத்தமா என்று தீர்மானிக்கப் போகின்ற நேரத்தில் நாமும் எதற்கும் தயார் என்று இருக்கவேண்டும். ஆனந்தசங்கரிகளும், டக்ளஸ் தேவானந்தாக்களும் எமது பிரதிநிதிகளாக இருக்கக் கூடாது. இலங்கையின் அரிசியும், பருப்பும் வேண்டும். இலங்கையின் இராணுவம்தான் கூடாதா என்றுகேட்ட ஈ.பி.டி.பியும், புலிகள் யாழ்ப்பாணத்தை விட்டுப்போய்விட்டனர். ஜய சிக்குறு தொடங்கிவிட்டது. என்று முதலில் வரவேற்று அறிக்கைவிட்ட ஆனந்தசங்கரியும் நாடாளுமன்றம் சென்றால் என்ன நடக்கும்? சமாதானம் மட்டும் தடம்புரளும் என்று எண்ணக்கூடாது. காட்டிக் கொடுப்புகளும், துரோகத்தனங்களும் அதிகரிக்கும். இந்த மண்ணிண் மைந்தர்கள் செய்த தியாகங்களுக்கு ஈடிணை கூறமுடியுமா? தமிழ் மக்கள் செய்த தியாகம் அளவிடக்கூடியதா? தற்கொலையாளியின் ஈகத்திற்கு இணையுண்டா? வாழவேண்டிய வயதில் தம் இனத்திற்காக உயிர்த்தியாகம் செய்த பதினெட்டாயிரம் மாவீரர்களின் தியாகத்தை மறக்கமுடியுமா? ஒவ்வொரு தமிழ் மகனும், மகளும் எதையாவது தியாகம் செய்துள்ளதை மறக்கமுடியுமா?

ஆனால் கொழும்பிலும், இந்தியாவிலும் எந்த நெருக்கடியும் இல்லாமல் உல்லாசமாக வாழ்ந்துவிட்டு தந்தை செல்வாவின் படத்தை தன் படத்திற்கு அருகில் போட்டு தந்தை செல்வாவின் தியாகத்தை கூறித்தானும் தியாகம் செய்ததாக பிதற்றும் சங்கரியார்- தமிழ் மக்களைப் பற்றி என்ன நினைத்துள்ளார்? மக்கள் சொல்லவேண்டும். அவர் தியாகம் செய்தார், இவர் தியாகம் செய்தார் என்று. பாவம் சங்கரியார், தானே சொல்லுகிறார் தான் தியாகங்கள் பல செய்ததாக. மக்கள் நம்புவார்களா?

தமிழ் மக்கள் தமது கடமையை ஏப்ரல் 2 ஆம் திகதி நிறைவேற்ற வேண்டும். நாடாளுமன்றம் செல்லக் கூடாதவர்களை முதலில் இனங்காண வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தந்தை செல்வாவின் இலட்சியங்களை நிறைவேற்ற வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் முழுமையான தொகுதிகளையும் வெற்றிபெற வேண்டும். தமிழீழத் தேசியத் தலைவரின் பின்னால் தமிழினம் உள்ளது என்பதை உலகுக்குக் காட்டவேண்டும். இது தமிழ் மக்களின் கடமை.

அகதிவாழ்வின் பதிவுகள்... பகுதி XXXII

சிவா சின்னப்பொடி

# கலகக் குழுக்களால் ஏற்பட்ட தொல்லைகள்

இது சுவிஸ் நாட்டின் பாசல் நகரில் நடந்த ஒரு சம்பவம். இங்கே தாயகத்தில் குடா நாட்டின் அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த தயாபரன் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி திடீரென்று காணாமல்போய்விட்டார்.

அவருக்கு எதிரிகள் என்று குறிப்பிட்டுச் சொல்லும்படியாக ஒருவரும் இல்லை. அவரது மனைவியும், பிள்ளைகளும் இந்தியாவின் சென்னை கே.கே. நகரில் வசித்துவந்தனர். 1988 ஆம் ஆண்டு சுவிஸிற்குச் சென்ற அவர்- பாற்கட்டி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் வேலைபார்த்து வந்தார். சம்பவம் நடந்த அன்று வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பும் வழியிலே அவர் காணாமற்போனதாக தெரியவந்தது.

அவருடன் தங்கியிருந்த நண்பர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அவரை இனவாதிகள் கடத்தி இருப்பார்களோ அல்லது எங்காவது விபத்தில் சிக்கியிருப்பாரோ என்றெல்லாம் பல்வேறு கோணத்தில் சிந்தித்தனர். அல்லது திடீரென்று அவசரம் ஏதாவது ஏற்பட்டு எங்காவது சென்றிருக்கலாம் என்றும் சிந்தித்த அவர்கள் இரண்டுநாள்வரை பொறுத்துப் பார்த்தனர். அந்த இரண்டு நாட்களும் நண்பர்கள், தெரிந்தவர்கள் என்று பல்வேறு இடங்களிலும் தொலைபேசியிலும் நேரடியாகவும் விசாரித்துப் பார்த்த பின்பு காவற்துறையில் சென்று முறையிட்டனர். அவர்கள், அவர் வேலைசெய்த தொழிற்சாலையிலும் அவரது நண்பர்களிடமும் பல்வேறு கோணங்களிலும் விசாரணைகளை நடத்தினார்கள். அவர்களுக்கு குறிப்பிடும்படியான எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை. அவரைக் காணவில்லை என்பதைத் தவிர அவர் கடத்தப்பட்டிருக்கலாம் என்பதற்கான எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. அவர் கனடாவிற்கோ, லண்டனுக்கோ சென்றிருக்கலாம் என்ற சந்தேகத்துடன் பாசல் நகர காவல் துறையினர் அவரது கோவையை கிடப்பில் போட்டுவிட்டனர்.

இந்தச் சம்பவம் நடந்த ஆறு மாத காலத்தின் பின்பு பாரிஸில் இருந்து சென்று சுவிஸில் வன்முறையில் ஈடுபட்ட கலகக் குழு உறுப்பினர்கள் பாசல் நகரத்திலுள்ள ஒரு வீட்டில் தங்கியிருப்பதாக கிடைத்த தகவலை அறிந்து அந்த வீட்டை முற்றுகையிட்டு குடா நாட்டின் புத்தளத்தைச் சேர்ந்த (பெயர் மாற்றப்பட்டுள்ளது) வேலாயுதம் என்பவரைக் கைதுசெய்தனர்.

அவரது வீட்டைச் சோதனையிட்டபோது, முன்பு காணாமற்போயிருந்த வேலாயுதமும் அவரும் ஒன்றாய் எடுத்த படத்தையும் காவற்துறையினர் கைப்பற்றினர்.

'தயாபரன் காணாமற்போனதற்கும் - கைது செய்யப்பட்ட வேலாயுதத்திற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா என்ற கோணத்தில் பாசல் நகர குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்த விசாரணையின்போது பல திடுக்கிடும் உண்மைகள் வெளியாகின.

தயாபரன் - வட்டிக்குப் பணம் கொடுக்கும் வழக்கத்தினைக் கொண்டுள்ளார். வேலாயுதம் 20 ஆயிரம் சுவிஸ் பிராங் பணத்தை முதலில் தயாபரனிடம் இருந்து வட்டிக்கு பெற்றிருந்தார். ஒருவரிடம் வட்டி செலுத்தியபின், பத்தாயிரம் பிராங் பணத்தையும் திருப்பிக் கொடுத்துவிட்டு இந்தியாவிலுள்ள புடைவை இறக்குமதி வியாபாரம் செய்யப்போவதாகக் கூறி, மேலும் 40 ஆயிரம் பிராங் பணத்தை



அவர் தயாபரனிடம் இருந்து கடனாகப் பெற்றிருந்தார்.

வேலாயுதம் புத்தூரிலுள்ள ஒரு பிரபல கல்லூரியில் தன்னுடன் ஒன்றாகப் படித்தவர், சுவிஸுக்கும் ஒன்றாக வந்தவர் என்ற நெருக்கத்தில் தயாபரன் பின் திகதியிட்ட காசோலையை அவரிடமிருந்து பெற்றுக்கொண்டு நம்பிக்கையின் அடிப்படையில் பணம் கொடுத்திருந்தார்.

பாரிஸில் இயங்கிய கலகக்குழுக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த வேலாயுதத்திற்குத் தயாபரனின் பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. இதுபற்றி அவர் அந்தக் கலகக்குழுவினருடன் ஆலோசித்தபோது, இது சாதாரண வேலை. ஆளின் கதைமுடித்துவிட்டால் சரி என்று சொல்லியுள்ளனர்.

வேலாயுதம் முதலில் இதைக் கேட்டு, ஆடிப்போய்விட்டார். ஆனால், எல்லாம் நாங்கள் பார்த்துக்கொள்கின்றோம். எங்களுக்குப் 10 ஆயிரம் பிராங் தரவேண்டும் என்று அந்தக் கலகக் குழுவினர் - தைரியமூட்டியபோது, அவர் அதற்கு ஒப்புக்கொண்டார்.

சம்பவம் நடந்த அன்று, வேலாயுதம் தயாபரனுக்கு தொலைபேசி எடுத்து, அவரது கடனையும், வட்டியையும் சேர்த்துத் தருவதாகவும் தான் தந்த காசோலைகளைக் கொண்டுவரும்படியும் தெரிவித்திருக்கிறார். அவர் சொன்னதை நம்பிய தயாபரன் காசோலையுடன் தயாபரன் வீட்டுக்குச் செல்ல, அங்கே இருந்த கலகக் குழுவினர் அவரைத் துப்பாக்கிமுனையில் கொலை செய்யப்போவதாக மிரட்டி, அவரது வங்கிக் கடன் அட்டையையும், அத்றகான இரகசியக் குறியீட்டு எண்ணையும் பெற்றிருக்கிறார்கள்.

வேலாயுதத்தை அனுப்பி அந்த வங்கிக் கடன் அட்டைக்குரிய இரகசியக் குறியீட்டு எண் சரியானதா என்று சோதித்துப் பார்த்திருக்கிறார்கள். வேலாயுதம் பாசல் தொடரூந்து நிலையத்திற்குச் சென்று அங்கேயிருந்த தானியங்கி - பண விநியோக இயந்திரத்தை அந்த அட்டையைவிட்டு, 1500 சுவிஸ் பிராங் பணத்தை எடுத்துவந்துள்ளார். அந்தக் குறியீட்டு எண் சரியானது என்று தெரிந்தவுடன், அன்றிரவு தயாபரனுக்கு போதை ஊசியேற்றி- போதையில் மிதக்கவைத்து காரில் அழைத்துச் சென்று பிரான்ஸ் எல்லைக்குச் சமீபமாகவிருந்த காட்டில் வைத்துக் கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிட்டு, சடலத்தைப் புதைத்துவிட்டுச் சென்றுவிட்டனர்.

வேலாயுதத்திடம் இந்தத் தகவல் களைப் பெற்றுக்கொண்ட பாசல் நகர புலனாய்வுத் துறையினர் அவர் மூலமாகவே அந்தக் கலகக் குழுவினரைத் தந்திரமாகப் பாசலுக்கு வரவழைத்துக் கைதுசெய்தனர். அத்துடன், அவர்களை விசாரிக்க வேண்டிய விதத்தில் விசாரித்து, தயாபரனின் உடல் புதைக்கப்பட்ட இடத்தையும் கண்டுபிடித்தனர்.

தயாபரனின் வங்கியில் நடத்திய விசாரணையின்போது, இந்தக் கலகக் குழுவினர் பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி என்று மாறிமாறி 22 ஆயிரம் பிராங் பணத்தை அவரது கணக்திலிருந்து எடுத்தது தெரிவந்தது. இதன் பின்னர், பாரிஸில் இருந்த அந்தக் கலகக் குழுவின் தலைவரையும் அவருடன் சேர்ந்த முக்கிய உறுப்பினர்களையும் கைதுசெய்வதற்கு பிரெஞ்சுக் காவற்துறையினரின் உதவியை சுவிஸ் காவற்துறை நாடியது. ஆனால், தமது சகாக்கள் பிடிபட்ட செய்தியறிந்த அந்தக் கலகக் குழுவின் தலைவர் தனது எஞ்சிய சகாக்களுடன் தலைமறைவாகிவிட்டார். பின்பு இது தொடர்பாக நடந்த வழக்கில் - வேலாயுதத்திற்கும் மற்றும் மூவருக்கும் எட்டு வருடச் சிறைத்தண்டணை விதிக்கப்பட்டதாக அறியமுடிந்தது.

உண்மையில் 1992 ஆம் ஆண்டிற்கும் 1995 ஆம் ஆண்டுக்கும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் இனவாதிகள், நிறவாதிகளின் அச்சுறுத்தலுக்குப் பயந்ததைவிட, இந்தக் கலகக் குழுக்களின் அடாவடித்தனங்களுக்கே அதிகமாகப் பயந்தார்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் ஒழுங்கமைக்கப்பட்டுவந்த, தமிழ் சமூக அமைப்பு ஆட்டங்காணுமளவிற்கு இந்த அச்சுறுத்தல் இருந்தது.

பொதுவாகத் தமிழ் மக்களுக்கு சேமிப்புப் பழக்கம் இருக்கும். அந்தக் காலத்தில் வங்கி நடைமுறைகளுக்கு முற்றாகப் பழகிக் கொள்ளாத அவர்கள் - நகைகளையும், பணத்தையும் தங்கள் வீடுகளில் வைத்திருக்கும் பழக்கத்தையே அதிகமாகக் கொண்டிருந்தார்கள்.

இதை நன்கு தெரிந்துகொண்ட இந்த கலகக்குழுக்கள் சில இடங்களில் தாங்களே நேரில் சென்றும், பல இடங்களில் ஆபிரிக்க மற்றும் அரேபிய இனக் கலகக் குழுக்குடன் இணைந்தும், தமிழ் மக்களின் வீடுகளை நோட்டம் விட்டுக் கொள்ளையடித்துச் சென்றன. பாரிஸ் காவற்துறையினரின் தகவலின் படி, 1992 ஆம் ஆண்டிற்கும் 1995 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கைத் தமிழர்கள் மத்தியில் 342 வீடுகளை உடைத்த திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

(தொடரும்...)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இனத்துஆற்றி எண்ணாத வேந்தன் சினத்துஆற்றிச்*
*சீறின் சிறுகும் திரு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அன்னை பூபதி நினைவு நாட்களும் விடுதலை தேடும் மகளிர் பிரகடனமும்.

இது தேர்தல் காலம். அது மட்டுமல்ல அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவத்தினரான இந்தியப்படையினரை எமது தாயக மண்ணிலிருந்து வெளியேறுமாறு கோரி, அகிம்சை வழியில் உண்ணா நோன்பிருந்து தன் இன்னுயிரை ஈகம் செய்த அன்னை பூபதியின் நினைவு மாதமும் கூட...

வழமையிலும் பார்க்க தமிழ் மக்கள் அறிவுபூர்வமாகவும், அரசியல் சிந்தனையின் பாற்பட்டும், செயற்படவேண்டிய ஒரு மாதமாகவும் இதனை உணர்ந்து கொள்ளவேண்டும்.

தமிழ் மக்களினதும், அவர்கள் தம் தாயக பூமியினதும் விடிவுக்காகவும், அன்னை பூபதி போராடிய விதமும் செய்த தியாகமும் தமிழர் நெஞ்சங்களில் என்றைக்கும் நிலைத்து நிற்கும் ஒன்றாகும்.

அவர் தனது தள்ளாத வயதிலும் ஒரு இலட்சிய உணர்வுறுதியுடன் இந்திய ஆக்கிரமிப்புப் படையினருக்கு எதிராக நியாயமானதும், தமிழ்த் தேசியரீதியில் மிக அவசியமானதுமான கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சைரீதியில் போராட முடிவெடுத்த போது, அந்தப்படை தமிழீழ விடுதலைப்புலிகள் மீதும் தமிழுணர்வும் தேசப்பற்று மிக்க தமிழ் மக்கள் மீதும் கொடூரமான ஒரு யுத்தத்தை தீவிரமாக நடத்திவந்தமை தெரிந்தவிடயமே.

ஏற்கனவே, அம்மாவுக்கு முன்னர், இதேபோன்ற நியாயமான கோரிக்கைளை முன்வைத்து, இதே ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக தியாகி திலீபன் நடத்திய அகிம்சைப் போராட்டத்தை, அகிம்சாமூர்த்தி காந்திஜியை தேசப்பிதாவாக பெருமையுடன் போற்றும் நாடு எவ்வாறு அலட்சியம் செய்து திமிர்த்தனமாக நடந்து கொண்டது என்பதை நன்கறிந்திருந்தும் கூட அன்னை பூபதி மீண்டும் அதேபோன்ற ஒரு போராட்டத்தை ஆரம்பித்தபோதே, மனித நேயமற்ற இந்திய ஆட்சியாளர்களின் இதயத்தை நன்கு புரிந்து கொண்டிருந்த மக்கள் அன்னையின் முடிவை மாற்ற முனைந்தபோதும் அவர்தனது கொள்கையில் விடாப்பிடியாக இருந்து இந்தியாவின் முகத்திரையை மீண்டும் ஒரு தடவை கிழிக்க தன் உயிரை ஈகம் செய்யத்துணிந்தமை, அவரின் தேசிய இலட்சியப்பற்றுக்கு அசைக்கமுடியாத உதாரணமாகும்.

இன்றைய சூழலில் அன்னையின் இந்த இலட்சிய உறுதி கொண்ட இதயம் நம் எல்லோருக்குமே வழிகாட்டியாக இருக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம் என்றே கூறவேண்டும்.

கொள்கையில் உறுதியும், இலட்சியத்தில் நம்பிக்கையும் தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்பி, தமிழ்த் தேசியத்தை எதிரிகளிடமிருந்து மீட்பதில் சலியாத செயற்திறனும் கொண்டவர்களாக எமது தமிழ் மக்கள் அனைவரும் தம்மை ஒரு வலிமைமிக்க தலைமைத்துவத்தின் கீழ் அணிவகுத்து நின்று குரல் கொடுக்கவும், போராடவும் ஒருங்கிணைந்துள்ளோம் என்பதை தென்னிலங்கை பேரினவாத சக்திகளுக்கு மாத்திரமல்ல சர்வதேச - சமாதானத்தை வலியுறுத்தும் - சமூகங்களுக்கும் உணர்த்தவேண்டிய வரலாற்று முக்கியத்துவமிக்க காலகட்டம் இதுவாகும்.

அதாவது ஜனநாயக ரீதியிலும் நாம் நமது இலட்சியத்துக்காக - போர்க்களத்தில் ஒருமித்து நின்றதைப்போன்று - ஒருங்கிணைந்து நிற்கிறோம், என்பதை இந்தத் தேர்தல் மூலம் உணர்த்தவேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு இப்போது உள்ளது.

குறிப்பாக, அன்னை பூபதி வழிவந்த எமது பெண்கள் இந்தத் தேர்தலில் தமது பொறுப்புக் குறித்து அலட்சியமாக இருந்து விடக்கூடாது என்பதையே இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

கடந்த சில நாட்களாக யாழ்.குடாநாட்டில் பெண்கள் பண்பாட்டு மையத்தினர் - தமிழ்ப்பெண்கள் மத்தியில் தமிழ்த் தேசியம் குறித்த எழுச்சிச் சிந்தனையுணர்வை ஏற்படுத்த இந்தத் தேர்தலில் அவர்களுக்கான பொறுப்பினை வலியுறுத்தி அரசியல் மற்றும் சமூகரீதியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

குடாநாட்டில் - தேர்தலில் போட்டியிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரான திருமதி பத்மினி சிதம்பரநாதனை ஆதரிக்குமாறு கூறி பெண்கள் பண்பாட்டு மையத்தினர் நடத்தி வரும் எழுச்சிக் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், சந்திப்புக்கள் போன்றவை வெறுமனே தேர்தல் பிரசாரக் கூட்டங்களாக மட்டுமன்றி பெண்கள் விழிப்புணர்வு நிகழ்வுகளாகவும் அமைந்து வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஒடுக்குமுறை வாழ்வில் எம்மை இழந்து பொய் மனஉலக இருட்டுக்குள் முடங்கிக் கிடந்த நாம் அழுதும் தொழுதும் வாழ்ந்த வாழ்க்கை இனிவேண்டாம் தலை நிமிர்ந்த வாழ்க்கையை சமைப்போம் என விடுதலைக்கு மகளிர் எல்லாம் வேட்கை கொண்டு எழுச்சிகொள்வது காலத்தின் அவசியமாகியுள்ளது, வரலாற்றுத் தேவையாகவும் உள்ளது.

தலை நிமிர்ந்த ஒரு வாழ்க்கையை சமைப்போம், என்ற விருப்புடனும் எமது நியாயமான விருப்புக்களை நிறைவேற்றத் தேவையான அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக உறுதி பூண்டு உழைப்பதற்கும் முன்வந்துள்ளோம் என்ற விடுதலை தேடும் மகளிரின் பிரகடனமானது அன்னை பூபதியின் நினைவு நாட்களில் ஓங்கி ஒலிப்பது அர்த்தமுள்ளதேயாகும்.

அதுமட்டுமல்ல அவரின் ஆத்மாவை சிலிர்க்கவைப்பதுமாகும்.

## நாடும் நடப்பும்




செய்தி :- பிரதமர் பதவிக்கதிரையைக் கைப்பற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் போட்டா போட்டி

# இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை நிரந்தரமாக பணியிலிருந்து நீக்கும் இறுதி நிகழ்வு நாளை முதல் ஆரம்பம்!

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை நிரந்தரமாகப் பணியிலிருந்து நீக்கிவிடுவதற்கான இறுதிநிகழ்வுகள் நாளை முதல் எதிர்வரும் 26 ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இராணுவத்தில் இணைந்த காலப் பகுதியிலிருந்து 2003 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் 3 வருடங்களைப் பூர்த்தி செய்தவர்களுக்கும் பயிற்சிக் காலத்தின்போது இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படுவதுடன் இவர்களுக்கு இராணுவத்திலிருந்து விலகியமைக்கான சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு - களுத்துறை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் முன்னர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.(01)

## தபால் மூல வாக்களிப்புக்கு வாக்குச்சீட்டுக்கள் வந்தன!

(சாவகச்சேரி)

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வாக்களிப்பதற்காக தபால்மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்த தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சார உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான வாக்குச்சீட்டுக்கள் கல்வி வலய அலுவலகம், கோட்டக் கல்வி அலுவலகம் ஆகியவற்றுக்கு வந்துள்ளன.

வாக்களிப்புக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலராக குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் முன்னிலையில் வாக்களிப்பு இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம், எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவற்றின் அதிபர்கள் ஊடாக விண்ணப்பித்தவர்களுக்கு அந்தந்தப் பாடசாலைகளில் வாக்களிப்பு நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (34)

## மாமுனை - சுண்டிக்குளம் வீதி புனரமைப்பதற்கு நடவடிக்கை!

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான 18.2 கிலோமீற்றர் நீளமான வீதியை உலக உணவுத்திட்டத்தின் நிதியுதவியின் கீழ் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தார் போடப்பட்ட பகுதிகளை விட மிகுதிப் பகுதி கடற்தொழிலாளர் சங்கங்களால் களிமண் போடப்பட்டு செப்பனிடப்பட்டது. தார் வீதிப் பகுதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் செப்பனிடப்படவுள்ளது.

இதேவேளை - வீதி புனரமைப்புக்கென கற்கள் பறிக்கப்பட்டும் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்படாததால், அந்த வீதியால் பயணம்செய்வோர் பெரிதும் சிரமப்படுவதாகவும் கடற்தொழில் அதிகளவில் நடைபெறுவதால் அந்தப் பகுதியில் போக்குவரத்துக்கள் அதிகரித்துள்ளமை பொதுமக்கள் பெரிதும் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (17)

### நெடுந்தீவுப் பகுதியில்

## வீதி விளக்குகள் இன்மையால் பொதுமக்கள் பெரும் சிரமம்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பகுதியின் பிரதான வீதியில் விளக்குகள் பொருத்தப்படாமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மாவிலித் துறைமுகம் முதல் சீக்கிரியாம் பள்ளம் பகுதி வரையான பிரதான வீதியின் அருகிலே உள்ளவர்களுக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் வீதி விளக்குகள் பொருத்தப்படாததனால் பல விபத்துக்களை இரவில் பயணம் செய்வோர் எதிர்கொள்ள நேரிடுகிறது.

இதேவேளை - பிரதான வீதியின் உட்புறமாக உள்ள மக்கள் தங்கள் பகுதிக்கான மின்சாரம் எப்போது கிடைக்குமோ என காத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (13)

## தேர்தல் வன்முறைகள் 665 ஆக உயர்வடைந்தது!

(கொழும்பு)

தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை இடம்பெற்ற தேர்தல் வன்முறைகளின் எண்ணிக்கை 665 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை நேற்றுடன் முடிவடைந்த 24 மணிநேரத்திற்குள் 37 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 26 குற்றச்சாட்டுக்களாகவும், 11 தேர்தல் வன்முறைகளாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14 குற்றசாட்டுக்களுடனும், ஐக்கிய தேசிய முன்னணி 12 குற்றசாட்டுக்களுடனும் ஏனைய கட்சிகள் 11 குற்றச்சாட்டுக்களுடனும் தொடர்புபட்டுள்ளன.

### சாவகச்சேரி பகுதியில்

## கள் அடைக்கும் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை!

(சரசாலை)

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தினால் 21 லட்சம் ரூபா செலவில் இயந்திரம் மூலம் கள் அடைக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தத் தொழிற்சாலைக்கான கட்டடம் அமைப்பதற்கென 10 லட்சம் ரூபாவினை 2004 ஆம் ஆண்டுக்கான மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரசாங்க வழங்கியுள்ளதாகவும், தொழிற்சாலைக்கான இயந்திர உபகரணங்கள் சங்கத்தினால் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் சங்க பொதுமுகாமையாளர் வே. கிருஷ்ணன் தெரிவித்தார்.

தற்போது கள் சீஸன் ஆரம்பித்துள்ளதால் சங்கப் பணியாளர்கள் கையினால் போத்தலில் கள் அடைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் தயாரிக்கப்படும் போத்தல் கள் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் விற்பனைக்கு விடப்படும் எனவும் தெரிவித்தார். (34)

## கலைஞர்களுக்கு காப்புறுதி வழங்குவதற்கு நடவடிக்கை!

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகலதுறைகளையும் சேர்ந்த பதிவுசெய்யப்பட்ட கலைஞர்களுக்கு பிரதிபா பிரணாம் காப்புறுதித் திட்டத்தின் கீழ் வைத்திய காப்புறுதி பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மனிதவள அபிவிருத்தி, கல்வி மற்றும் கலாசால அலுவல்கள் அமைச்சு அண்மையில் விடுத்திருந்த சுற்றுநிருபத்திற்கிணங்க இந்த நடவடிக்கை பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான விண்ணப்ப் படிவங்கள் உரிய கலைஞர்களுக்கு கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பத்தை பூர்த்திசெய்து இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (44)

தெற்குத் திசையினிலே... - கொழும்பிலிருந்து இந்திரஜித் -

# ஜனாதிபதி மட்டத்திலிருந்து தொடரும் தேர்தல் வன்முறைகள்

**ஆட்சிசெய்த சிங்கள அரசியல்வாதிகள் எல்லோருமே தவறிழைத்தவர்கள்தான். ஆனால், ஒவ்வொருவரும் மற்றவரை குறைசொல்லக்கூடாது என்பதற்காகவே இந்த வரலாற்றை இந்தக் கட்டுரையில் திரும்பிப்பார்க்க நேர்ந்தது. குற்றவாளிகளை உருவாக்கிவிட்டது வரலாற்றுத் தவறாகவே கருதப்படவேண்டும் என ஒருவரை ஒருவர் குற்றம்சுமத்தாமல் அதனை எவ்வாறு தவிர்ப்பது என யோசித்து செயற்படுவதே சிறந்த நடவடிக்கையாக இருக்கமுடியும்.**

செவ்விகள், உரைகள், உறுதிமொழிகள், கோஷங்கள் என 2004 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தல் முனைப்புக்கள் நடந்து கொண்டிருந்தன. தேர்தல் வன்முறைகளின் தொகை 600 ஐயும் தாண்டியுள்ளது. ஆனால், கொலை சம்பவங்களைப் பொறுத்த வரையில் முன்னைய தேர்தல்களைவிட நிலைமை சுமுகம் என்றே சொல்லவேண்டும்.

கடந்த 2001 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஜனாதிபதியின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி அதிகமான வன்முறை முறைப்பாடுகளை செய்திருந்தது.

ஆனால், இந்த முறை ஐக்கிய தேசியக் கட்சிக்கெதிராக பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் அதிகமான முறைப்பாடுகளை செய்துள்ளன.

பொலிஸ் மற்றும் இராணுவம் என்ற படைப்பிரிவுகள் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் இந்த முறை அவரின் கட்சிக்கு எதிராக வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுவது வியப்பான சம்பவம்தான். ஏனைனில், ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்த 2 வருட காலப் பகுதியில் உள்துறை அமைச்சை ஜனாதிபதி தொடர்ந்தும் குற்றம்சுமத்தி வந்துள்ளார்.

பொலிஸ் பிரிவு முழுமையாக இந்த அமைச்சின் கீழ் இருந்ததால், ஜனாதிபதி இந்தக் குற்றச்சாட்டுக்களை உள்துறை அமைச்சின்மீதே சுமத்திவந்தார். தமது கட்சிகளுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

இந்த விடயத்தில் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனக் குற்றம் சுமத்தியே அவர் அந்த அமைச்சை பொறுப்பேற்றார்.

அதேநேரம் நாட்டில் ஏனைய குற்றச்செயல்களை கட்டுப்படுத்த உள்துறை அமைச்சு தவறிவிட்டதாகவும் ஜனாதிபதி கூறிவந்தார். இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் 3 ஆம் திகதி மூன்று முக்கிய அமைச்சுக்களை அவர் பொறுப்பேற்றபின்னர் நாட்டில் இந்த விடயத்தில் எவ்விதமான முன்னேற்றங்களும் ஏற்படவில்லை என்றே கூறவேண்டும்.

வன்முறைகள் மற்றும் குற்றச்செயல்கள் யாவும் ஐக்கிய தேசியக் கட்சியினாலேயே உருவாக்கப்படுகின்றன என்ற ரீதியில் கருதியமை காரணமாகவே ஜனாதிபதியினால் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்த முடிந்தது. ஆனால், இந்த வன்முறை மற்றும் குற்றச்செயல்களுக்கு தாமும் ஒரு காரணம் என அவர் உணரவில்லை என்பது அரசியலில் அவரின் இயலாத் தன்மையையே எடுத்துக்காட்டுகின்றது.

1994 ஆம் ஆண்டு பெரும்பான்மை. அதுவும் தமிழர்களின் பெரும்பான்மை வாக்குகளால், ஜனாதிபதியாக சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொறுப்பேற்றபோது அவரின் தோளில் நாட்டின் சமாதானம் உட்பட்ட பொறுப்புக்கள் சுமத்தப்பட்டன. அதுவும் நாட்டின் குற்றச்செயல்கள் தடுக்கப்படும் என்பது உட்பட முழுமையான நம்பிக்கையுடன் அந்தப் பொறுப்புக்கள் அவரிடம் ஒப்படைக்கப்பட்டன.

அதில் சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவர் மறைந்த நடிகர் விஜயகுமாரதுங்க யாழ்ப்பாணத்திற்கு வந்ததும், அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளை அவர் சந்தித்ததும், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மனதில் இருந்து அகலாத நினைவுகளாகும். அதனைக் கருத்திற்கொண்டே அதாவது, தமிழ் மக்கள் மத்தியில் அவர் பெருமையைப் பெற்றுவிடுவார் எனக் கருதியே அவர் பின்னர் கொலை செய்யப்பட்டவர் என கதைகளும் உலாவின.

ஆனால், அது எந்தளவு உண்மை என்ற விடயம் இதுவரை மறைக்கப்பட்டே வருகிறது. விஜயகுமாரதுங்க யாழ்ப்பாணம் வந்தபோது அவருடன் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் வந்திருந்தார். அந்த நினைவுகள்தான் விஜயகுமார துங்க கொல்லப்பட்டபின்னர், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அல்லது விஜயகுமாரதுங்கவின் சிதையில் வைத்து எடுத்துக்கொண்ட உறுதிமொழி தமிழர்களின் மனதைத் தொட்டுநிற்கின்றது.

இவையாவும் கருத்திற்கொள்ளப்பட்டே அவரை ஜனாதிப்பதியாகத் தெரிவுசெய்வதற்கு தமிழர்கள் ஒன்றுபட்டுநின்றனர். ஆனால், அந்த ஜனாதிபதி எதையுமே நிறைவேற்றாமல் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டார் என்ற எண்ணம் இன்றும் தமிழர்கள் மத்தியில் இருந்து அகலவில்லை. இது ஒருபுறம் இருக்க இதற்கும் குற்றச்செயல்களுக்கும் என்ன தொடர்பு என கேட்கும்போது அங்கேதான் ஜனாதிபதியின் திட்டமிடப்படாத யுத்த நடவடிக்கைகள் மேலோங்கி நிற்கின்றன.

இந்த யுத்தம் காரணமாக நாட்டின் அபிவிருத்திகள் எவையும் உரியமுறையில் மேற்கொள்ளப்படவில்லை. நாட்டின் முழு வருமானமும் யுத்தத்திற்கு செலவிடப்படுகிறதோ? என்ற எண்ணம் மக்கள் மனதில் எழும் வண்ணம் ஜனாதிபதி சமாதானத்தைக் காட்டிலும் யுத்தத்தை முன்னெடுத்து வருவதில் உறுதியாகவிருந்தார்.

இந்த யுத்தம் வெற்றிபெறமுடியாத யுத்தம் என அவர் வாயளவில் பேசிவந்தாலும், அதனை நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. 'ஏழாம் தரத்தில் கல்விகற்றால் போதும். 15 ஆயிரம் ரூபா சம்பளத்தில் வேலைவாய்ப்பு இராணுவத்தில் சேருங்கள்' என்ற விளம்பரங்கள் மூலம், தென்னிலங்கையின் இளைஞர்கள் படைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

வெறும் கூலிகளுக்காகவே சென்ற அவர்கள் எதற்காக யுத்தம் செய்கிறோம் என தெரியாமலே தமது உயிர்களை பலியாக்கிக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் வேறுவழி தெரியாமல் இராணுவத்திலிருந்து பெரும் தொகையானோர் தப்பிச் சென்றனர்.

மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சி, பின்னர் ஜனாதிபதி ரணசிங்கப் பிரேமதாஸாவின் ஆட்சி, டி.பி.விஜயதுங்கவின் ஆட்சி என்பவற்றில் எல்லாம் யுத்தம் இடம்பெற்றது. ஆனால், தற்போதைய ஜனாதிபதியின் யுத்த நடவடிக்கை காலத்திலேயே பெருமளவான இராணுவ வீரர்கள் படைகளிலிருந்து தப்பிச்சென்றனர். இவர்கள் படைகளிலிருந்து தப்பிச் சென்றதன் பின்னர் குற்றவாளிகளைப்போல செயற்பட்டனர். அல்லது மீண்டும் படைகளில் வந்துசேருமாறு வலியுறுத்தப்பட்டனர். நம்பிக்கை என்ற அர்ப்பணிப்புடன் செல்லாது வெறும் சம்பவங்களுக்காகவே படைகளில் சேர்க்கப்பட்ட சிங்கள இளைஞர்கள் ஒரு போதும் தமது உயிர்களை இழக்கவிரும்பவில்லை. இதனை அரசாங்கம் உணர்ந்தாலும், அதன் அரசியல் மயப்படுத்தப்பட்ட யுத்தத்திற்கு இந்த இளைஞர்கள் பயன்படுத்தப்பட்டார்கள்.

எனவே, இவர்கள் தாம் தப்பிவந்தபோது, எடுத்துவந்த ஆயுதங்களுடன் கொள்ளைகளிலும் ஈடுபட ஆரம்பித்தனர். இதனால், குற்றச்செயல்கள் அதிகரித்தன. அதாவது வேலையற்றிருந்த இளைஞர்கள் பலாத்காரமாக அழைத்துச்செல்லப்பட்டு குற்றவாளிகளாக மாற்றப்பட்டுள்ளனர் என்றே இதனை எடுத்துக்கொள்ளமுடியும். இந்த விடயத்தில், இலங்கையை ஆட்சிசெய்த சிங்கள அரசியல்வாதிகள் எல்லோருமே தவறிழைத்தவர்கள்தான். ஆனால், தங்களை மற்றவர்கள் குறைசொல்லக்கூடாது என்பதற்காகவே இந்த வரலாற்றை இந்தக் கட்டுரையில் திரும்பிப்பார்க்க நேர்ந்தது.



குற்றவாளிகளை உருவாக்கிவிட்டது வரலாற்றுத் தவறாகவே கருதப்படவேண்டும் என, ஒருவரை ஒருவர் குற்றம்சுமத்த அதனை எவ்வாறு தவிர்ப்பது என யோசித்து செயற்படுவதே சிறந்த நடவடிக்கையாக இருக்கமுடியும்.

முழுக் குற்றச்சாட்டுகளும் ஜனாதிபதியின்மீது சுமத்தப்பட்டுள்ளதாக எண்ணி ஐக்கிய தேசியக்கட்சியும் அதன் தற்போதைய தலைவரான பிரதமரும் திருப்திகொள்ள முடியாது. வன்முறை கலாசாரத்திற்கும், வன்முறைகளுக்கும் முழுமையான ஆரம்பப் பொறுப்பையும் ஐக்கிய தேசியக் கட்சியே ஏற்கவேண்டும்.

தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் அதிலும் 1983 ஆம் ஆண்டின் வன்முறைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் சுயரூபத்தை தெளிவுபடுத்தவே செய்தன. அடுத்து இனத்திற்கு எதிராக மேற்கொண்ட வன்முறைகளின் பிரதிபலன்கள் இன்று இலங்கை ஆட்சியாளர்களின் சொந்த இனத்திற்கே குற்றச் செயல்கள் வடிவில் பாதகமாக அமைந்துள்ளதே உண்மை. தேர்தல் வன்முறைகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு தேர்தலின்போதும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனாதிபதியின் கட்சி என்ற இரண்டு கட்சி ஆதரவாளர்களுக்கிடையில் மோதல்களும், வன்முறைகளும் இடம்பெற்றுவருகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் அடுத்தடுத்த தேர்தல்கள் இடம்பெற்றுவருகின்றன. நாட்டின் தேர்தல் முறையின்படி எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்கமுடியாத காரணத்தினால் கட்சிகள் தமது சொந்த விருப்பங்களை எல்லாம் முன்கொண்டு ஆட்சிக்கு எதிராக செயற்படுவதும் அதன்மூலம் ஆட்சியைக் கலைப்பதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன.

இதன்காரணமாக அடிக்கடி தேர்தல்களை நடத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலை இலங்கையில் ஏற்பட்டுவருகிறது. தேர்தல்கள் எனும்போது ஜனநாயக ரீதியில் மக்களின் வாக்குகளை பெறமுயற்சிக்காது அவர்களின் விருப்பங்களுக்கு மாறாக வாக்குகளைப்பெற முயற்சிக்கும்போதே, வன்முறைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக, பிரசார மேடைகளில் தாம்செய்த பணிகள் எவை? செய்யாத பணிகள் எவை? என்பது தொடர்பாக பேசுவதைக் காட்டிலும், அடுத்தவரின் குறைகளை சுட்டிக்காட்டுவதிலும், அடுத்தவரை தூசிப்பதுமே இயல்பாக் இடம் பெற்றுவருகிறது.

எனவே, இந்த வேலைகளில் ஒரு அரசியல் கட்சியினர் மாற்று அரசியல் கட்சியினரை தூசிக்கும்போது இந்தக் கட்சியின் ஆதரவாளர்கள் கோபம் கொள்வதும் தாக்குதல்களில் ஈடுபடுவதும் மனித இயல்பில் பார்க்கும்போது தவிர்க்கமுடியாதவையாகும். இவ்வாறான செயல்களே இன்று நாட்டில் இடம் பெற்றுவருகின்றன.

1994 ஆம் ஆண்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சி, அதன்பின்னர் 2001 ஆம் ஆண்டிலும் அதன் தொடர்ச்சி என்றிருந்த வேளையில் யுத்தம்மீது மோகம்கொண்டமையினால் மீண்டும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டு அதில் மக்கள் - ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமது ஆதரவை வழங்கினர்.

எனினும், ஏற்கனவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியில் இருந்தமையால், அவருக்கு எதிரான ஐக்கிய தேசியக் கட்சியினால், 6 வருடகால ஆட்சியைக் கொண்டுசெல்ல முடியவில்லை. மீண்டும் பொதுத்தேர்தல் நடத்தப்படுகிறது.

இந்த நிலையில் இரண்டு கட்சிகளுக்கு இடையிலும் அரசியல் குரோதம் என்பதைக் காட்டிலும், தனிப்பட்ட குரோதம் போன்ற நிலை தற்சமயம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே, இந்த இரண்டு கட்சிகளின் தலைவர்களுடன் தமக்கிடையிலான குற்றச்சாட்டுக்களைப் பகிர்ந்து வருகின்றனர்.

இவர்கள் உரையாற்றும் விதம், குற்றச்சாட்டுக்களை சுமத்தும் விதம் - இவர்களின் ஆதரவாளர்களின் மத்தியில் வன்ம உணர்வுகளை எழுப்பிவிடுகின்றன. எனவே, அவர்கள் வன்முறைகளில் ஈடுபடுகின்றனர். இதே வேளை, தேர்தல் வேட்பாளர்களும் நேரடியாக வன்முறையில் ஈடுபடும் செயல்களும் இடம்பெற்றுள்ளன.

வடமேல் மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தஸநாயக்கவின் குழுவினர்கள் இவ்வாறான நேரடியான தாக்குதல்களில் ஈடுபட்டதாகப் பொலிஸாரால் குற்றம் சுமத்தப்பட்ட பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அதேபோல, மக்கள் விடுதலை முன்னணியில் விமல் வீரவன்ச அண்மையில் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் அலுவலகத்துக்குச் சென்று, துப்பாக்கி முனையில் அங்கிருந்தவர்களை அச்சுறுத்திய சம்பவம் ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இங்கே தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுவருகின்றபோதும், இதற்கு முந்திய தேர்தல் வன்முறைகளைக் காட்டிலும், இம்முறை தேர்தல் வன்முறைகள் குறைவாகவே இருப்பதாக பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.

தேர்தல் பிரசாரங்கள், வாக்குறுதிகள், குற்றச்சாட்டுக்கள், தாக்குதல்கள், மோதல்கள் என்பவற்றுக்கு அப்பாற்சென்று - ஒருவருக்கொருவர் நீதிமன்ற வழக்குத் தொடர்வது வரையிலும் முன்னேறியுள்ளது. அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவை இந்தத் தேர்தலுக்கு முன்னர் சிறையில் அடைக்கவேண்டுமென கங்கணம் கட்டியுள்ளார்.

அதற்கான முன்னெடுப்புக்களும் எடுக்கப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், தலைமை நீதியரசர் - அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மீது குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்யுமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். இது ஜனாதிபதிக்கு தேர்தல் பிரசாதமாக இருந்தாலும்கூட, எஸ்.பி.திஸநாயக்கவுக்கு அனுதாப வாக்குகளைக் கொண்டுவந்துவிடுமோ? என்ற அச்சம் - ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

மறுபுறத்தில் அரசாங்க சொத்துக்கள் தேர்தல் பிரசாரத்திற்காகப் பயன்படுத்துவது சட்டவிரோதமென, தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ள போதும்கூட, ஜனாதிபதி, அமைச்சர்களான எஸ்.பி.திஸநாயக்க, ஜயலத் ஜெயவர்த்தன போன்றோரும் அரசாங்க சொத்துக்களை தேர்தல் பிரசாரத்திற்காகப் பயன்படுத்தி வருவதாகப் பொதுச் சொத்துக்கள் தொடர்பிலான நிகழ்ச்சித் திட்டம் குற்றம் சுமத்தியுள்ளது. மொத்தத்தில் தேர்தல் வன்முறைகளில் துஷ்பிரயோகங்கள் ஜனாதிபதி மட்டத்தில் இருந்து எல்லா மட்டங்களிலும் இடம்பெறுகின்றன. எனவே, இந்த தேர்தல் ஜனநாயக ரீதியில் செயற்படவில்லை என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

# பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் தாக்குதல்கள் தொடருகின்றன!

ஆப்கானிஸ்தான் எல்லையுடன் அமைந்துள்ள பாகிஸ்தானின் பிரதேசமான வாசிறிஷ்தானில், பாகிஸ்தானிய படைகள் எறிகணைத் தாக்குதல்களை 400



இற்கு மேற்பட்ட அல் - கொய்டா போராளிகள் தங்கியுள்ள இருப்பிடங்களை நோக்கி மேற்கொண்டுவருகின்றனர்.

கடந்த 3 நாட்களாக துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட கோப்ரா ஹெலி கொப்ரர்களின் உதவியுடன் படையினர் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர். அல் - கொய்டாவின் உதவித் தலைவர் ஜமன் அல் சவாகிரி முற்றுகைக்குட்பட்ட பிரதேசத்தில் மறைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், படையினரின் தாக்குதல்களுக்கு பதில் தாக்குதல்களை அல் - கொய்டா போராளிகள் ரொக்கட் விசையுடனான கிரனைட்டுக்கள், மோட்டார் குண்டுகள் மூலம் நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகள் அதிரும் வண்ணம் இரு பகுதியினரும் தாக்குதல்களைத் தொடர்வதாக அயலில் உள்ள பனா நகர மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, எதிர்த்தாக்குதல்கள் நடத்தப்படும் பிரதேசங்களின் மூலம் 7 மறைவிடங்களைத் தாம் அடையாளம் கண்டுள்ளதாக பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.



அத்துடன், பாகிஸ்தான் படையினருக்கு வெற்றியில் நம்பிக்கை அதிகரித்துள்ளதால், பத்திரிகையாளர்களை சம்பவம் நடைபெறும் பிரதேசத்துக்கு அழைத்துச் செல்வதாகவும் பி.பி.சியின் சபீர் அபாஸ் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் சுல்தான் தெரிவிக்கும்போது, இரு போராளிகள் சுற்றிவளைக்கப்பட்ட எல்லையினூடாக வெளியேற முற்பட்ட வேளையில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் செச்னிய மற்றும் அரேபிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாகிஸ்தான் படைகளுக்கு ஏற்பட்ட சேத விபரங்கள் படை நடவடிக்கையின் முடிவில் அறிவிக்கப்படவுள்ளதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். ஆனால், படை நடவடிக்கை ஆரம்பித்த நாளில் 15 பாகிஸ்தான் போர்வீரர்களும், 24 போராளிகளும் கொல்லப்பட்டதாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த தலிபான் பேச்சாளர் அல் - கொய்டா அமைப்புக்கெதிரான தாக்குதல்களை அமெரிக்காவும், பாகிஸ்தானும் நிறுத்தாவிட்டால் அந்த நாடுகளுக்கு எதிரான தாக்குதல்கள் தொடருமென எச்சரித்துள்ளார்.

## அமெரிக்கப்படை தென்கொரியாவில் அடுத்த வாரம் பயிற்சிகளை மேற்கொண்டால் வடகொரியா அணுத்திட்டங்களை விரிவாக்கும்

## அந்நாட்டு பத்திரிகை தெரிவிப்பு

தென்கொரியாவில் அமெரிக்க இராணுவம் போர்ப்பயிற்சிகளை அடுத்தவாரம் நடத்த முற்பட்டால், வடகொரியா தனது அணுவாயுதத் திட்டங்களை விரிபுபடுத்துமென, வடகொரிய பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு - வடகொரியா தனது அணுவாயுதங்களின தரத்தையும், அளவையும் அதிகரிக்கவுள்ளதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கா முழுமையாக தன்னை அர்ப்பணிக்கவில்லை எனவும் வடகொரியா தெரிவித்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற பேச்சுக்கள் தோல்வியில் முடிந்துள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, எதிர்வரும் வியாழக்கிழமை சீனாவின் வெளிநாட்டமைச்சர் லீ சயோசிவ் வடகொரியாவிற்குச் செல்லவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது - வடகொரியாவின் அணுசக்தித் திட்டங்கள் தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.




## இந்திய விமானப்படைக்கு 66 போர் விமானங்கள் பிரிட்டனிடமிருந்து கொள்முதல்

(டெல்கி)

பிரிட்டனிடமிருந்து இந்திய விமானப்படைக்கு 6 ஆயிரம் கோடி ரூபா செலவில் 66 நவீன ஹோக் போர் விமானங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதற்கான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் டெல்கியில் கையெழுத்தானது. இந்தியாவின் சார்பில் பாதுகாப்புத்துறை செயலாளர் அஜய் பிரசாத்தும், பிரிட்டனின் சார்பில் டெல்கியில் உள்ள அந்த நாட்டின் தூதுவர் மைக்கல் ஆர்தரும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின்படி 24 போர் விமானங்கள் பிரிட்டனிடம் இருந்து நேரடியாக வாங்கப்படும். மீதமுள்ள 42 விமானங்கள் பிரிட்டன் ஏரோ ஸ்பேஸ் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் அனுமதியைப் பெற்று இந்துஸ்தான் விமான தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் என்று அஜய் பிரசாத் கூறினார்.

## ஒரிசாவில் பிரீத்வி ஏவுகணைச் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது!

(டெல்கி)

ஒரிசா மாநிலம் பாலாசோர் அருகேயுள்ள சாந்திபூரில் விமானப்படை மையத்தில் நடமாடும் ஏவுகணை தளத்தில் இருந்து நேற்றுமுன்தினம் காலை 10.10 மணிக்கு 100 கிலோ மீற்றர் முதல் 300 கிலோமீற்றர் தூரம் சென்று குறிப்பிட்ட இலக்கைத் தாக்கும் பிரிதிவி ஏவுகணை விண்ணில் செலுத்தப்பட்டு சோதனை நடத்தப்பட்டது.

இந்த ஏவுகணை நடுக்கடலில் 150 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள குறிப்பிட்ட இலக்கை வெற்றிகரமாக அடைந்தது.

1988 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி முதல் முறையாக ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து பிரிதிவி ஏவுகணை வெற்றிகரமாக செலுத்தப்பட்டது. இந்த ஏவுகணை தற்போது புதிய தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டு வெற்றிகரமாகச் சோதனை நடத்தப்பட்டுள்ளது என்று - இதன் திட்ட இயக்குநர் சுரேந்திரகுமார் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

## சூடானின் மேற்குப்பகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாயினர்

சூடானின் மேற்குப் பகுதியான டார்பெர் பிரதேசத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் துப்பாக்கி தாங்கிய அரேபியக் குழுவினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக, பி.பி.சியின் ஐக்கிய நாடுகள் சபையின் இணைப்பாளர் முகேஷ் கபிலா தெரிவித்தார்.

1994 ஆம் ஆண்டு ருவான்டாவில நடைபெற்றது போன்ற இனப்படுகொலை சூடானில் நடைபெற்றுவருவதாகவும், இதுவரை ஒரு இனத்தைச் சேர்ந்த 1 மில்லியன் மக்கள் பலவந்தமாக அவர்களது இருப்பிடங்களிலிருந்து அகற்றப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு வருடத்துக்கு முன்னர் இரு போராளிக் குழுக்களினால் அரசுக்கெதிராக நடத்தப்பட்ட போராட்டத்திற்குப் பதிலடி கொடுக்கும் முகமாகவே இந்த இன அகற்றல் போராட்டத்தை அரசுக்குச் சார்பான குழுவொன்று டார்பெர்ரில் நடத்திவருகின்றது.

அரேபியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள அரசு இம்மக்களை அவர்களின் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றுவதற்கு துணையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சூடானின் எல்லையில் அமைந்துள்ள சாட் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு 1 லட்சம் மக்கள் முயற்சிக்கும் வேளையில் எல்லைப்பகுதிகளில் இக்குழுக்களினால் தாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கபிலா மேலும் தெரிவிக்கும்போது - இரண்டு வாரங்களுக்கு முன்பு ரபிலா என்ற கிராமத்துக்குள் பிரவேசித்த அரேபியக் குழுவினர் 75 பொதுமக்களைக் கொலை செய்ததாகவும், நூற்றுக்கு மேற்பட்ட பெண்களைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், அந்தக் கிராமத்தில் அமைந்துள்ள வீடுகள், சந்தைகள், சுகாதார நிலையங்களையும் தீக்கிரையாக்கியுள்ளதாகவும், சுமார் 200 பெண்களைக் கடத்திச்சென்றதாகவும் குறிப்பிட்டார்.

இக்குழுவினர் ஒவ்வொரு கிராமங்களையும் மக்கள் இல்லாத பிர



தேசங்களாக மாற்றிவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் அமைப்புக்கள் சில பகுதிகளுக்கு மாத்திரமே செல்லக்கூடியதாக உள்ளதாகவும், அவ் அமைப்புக்களைச் சேர்ந்த பணியாளர்களும் தாக்குதலுக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் போர்நிறுத்தமொன்றை ஏற்படுத்துவதற்கு சர்வதேச நாடுகளின் தலையீடு அவசியமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜோர்தான் மன்னர் அப்துல்லாவுடன் இஸ்ரேல் பிரதமர் ஷரோன் இரகசிய சந்திப்பு



இஸ்ரேலின் தென்பகுதியில் பிரதமர் ஏரியல் ஷரோனுக்குச் சொந்தமான பண்ணையொன்றில் ஜோர்தான் மன்னர் அப்துல்லாவை ஷரோன் இரகசியமாகச் சந்தித்துள்ளார். இவர்கள் இருவரும் பல மணி நேரம் உரையாடியதாக இஸ்ரேல் வானொலி தெரிவித்தது.

மேற்குக்கரைப் பிரதேசத்தில் இஸ்ரேலியர்களால் அமைக்கப்பட்டு வரும் தடுப்புச்சுவர், பலஸ்தீனியர்களை அதிகளவில் ஜோர்தானில் புகலிடம் கோருவதற்கு வழிவகுக்கலாமென ஜோர்தானிய மன்னர் கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் தடுப்புச்சுவர் சர்வதேச மனிதநேய சட்டங்களுக்கு முரணானதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இத்தடுப்புச் சுவர் பலஸ்தீனியர்களின் சொத்துக்களுக்கு பாரிய சேதத்தை விளைவித்துள்ளது. அத்துடன், பலஸ்தீனியர்களின் நில அபகரிப்பு சட்டத்துக்கு முரணானதெனவும், ஐக்கிய நாடுகளினால் விசாரணை மேற்கொள்ளும் ஜோன் டுகாட தெரிவித்தார்.

தற்போது தடுப்புச்சுவர் அமைக்கப்படும் பகுதியில் வாழும் பலஸ்தீனியர்கள் இதனால் பிரிக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் இம்மக்களின் கல்வி, சுகாதாரம் என்பன பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஜோன் டுகொட் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகளுக்கான இஸ்ரேலியத் தூதுவர் யாகோ லெவி கருத்துத் தெரிவிக்கையில் - ஜோன் டுகாட் உண்மை நிலையை அறியாது கருத்தினைத் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

அதிகளவிலான பஸ்தீனியர்கள் ஜோர்தானுக்குள் இடம்பெயர்வது ஜோர்தான் நாட்டு இனங்களுக்கிடையே சமநிலையைப் பாதிக்கலாமென ஜோர்தான் மன்னர் அப்துல்லா கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நேட்டோ படையினர் கொசோவோவில் தமது நிலைகளைப் பலப்படுத்துகின்றனர்

நேட்டோ படையினர் கொசோவோவில் தமது நிலைகளைப் பலப்படுத்திவருகின்றனர். இதுவரை அல்பேனியர்கள், சேர்பியர்கள் மத்தியில் நடைபெற்ற தாக்குதல்களில் 30 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். அங்கு நேட்டோ படையினர் மேலதிகமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.



கொசோவோவில் இராணுவத்துக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரி கிரிகொரி ஜோன்சன் தெரிவிக்கும்போது, சிறுபான்மையினரான சேர்பியர்களை விரட்டுவதற்காகவே, அல்பேனியர்கள் இந்தத் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர் என தெரிவித்தார்.

இதுவரை 1000 சேர்பியர்கள் தமது இருப்பிடங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். இதனிடையே பெல்கிரேட்டில் அரசினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலமொன்றில் ஆயிரக்கணக்கான மக்கள் சேர்பியர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

சேர்பியப் பிரதமர் கொஷ்டனிக்கா இந்தத் தாக்குதல்கள் முன்னரே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதெனத் தெரிவித்தார். இவ்வகையான தாக்குதல் மூலம் சேர்பியர்களை வெளியேற்றுவதற்கு அல்பேனியர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையும், நேட்டோவும் சேர்பியர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு தவறியுள்ளதாக சேர்பிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமெரிக்கா கொண்டிருக்கும் அக்கறை; உரியமுறையில் பயன்படுத்த வேண்டும்!

## அமெரிக்க நிபுணர் கோரிக்கை

இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா கொண்டுள்ள அக்கறைகளை இயன்றளவு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சர்வதேச விவகாரங்கள் தொடர்பான அமெரிக்க நிபுணர் ஒருவர் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'தெற்காசியாவில் அமெரிக்காவின் பங்களிப்பு' என்ற கருத்தரங்கில் அமெரிக்க பேராசிரியர் கால் கின்டபொன்ட் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -அமெரிக்காவில் தேர்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட முன்னதாக இலங்கையின் சமாதான நடைமுறைகளில் கொண்டுள்ள ஈடுபாட்டை இலங்கை நல்லமுறையிலும் முழுமையாகவும் பயன்படுத்த வேண்டும்.

இலங்கையின் தலைவர்கள் உரிய முறையில் பயிற்சி பெற்றால் விரைவில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.

சமாதான நடைமுறைகளை மீண்டும் கடைப்பிடிப்பதில் உதவி, முதலீடு என்றவகையில் அமெரிக்கா, இலங்கையில் கொண்டுள்ள ஈடுபாடுகளை மேலும் மெருகூட்ட முடியும் என்று பேராசிரியர் கின்ட பொன்ட் மேலும் கூறினார்.

### மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபர் உயிரிழப்பு!

மன்னார் பொது விளையாட்டு மைதானத்திற்கு முன்னால், நேற்றுக்காலை 8.00 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

மன்னார் சின்னக்கடையைச் சேர்ந்த க.அந்தோனிப்பிள்ளை (வயது-70) என்பவரே உயிரிழந்தவராவர். இதேவேளை, மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்த சூசை ராஜா என்பவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (201)

# தபால் மூல வாக்களிப்பு 24, 25 ஆம் திகதிகளில்

(கொழும்பு)

நாடாளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு, எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார்.

தபால் மூலம் வாக்களிப்பதற்கான வாக்குச் சீட்டுக்கள் அந்தந்தத் திணைக்களத் தலைவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நாடளாவியரீதியில் 3 ஆயிரத்து 500 திணைக்களங்களில் இரண்டு இலட்சத்து 86 ஆயிரத்து 604 அரசாங்க ஊழியர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

கடந்த தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்தவர்களிலும், இந்தமுறை அதிகளவானோர் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர் எனவும் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார். (0

# கிழக்குப் பல்கலைக்கழகப் பரீட்சை மே மாதம் 15 இல் ஆரம்பமாகும்!

## பதிவாளர் அறிவிப்பு

கிழக்குப் பல்கலைக்கழக இரண்டாம் தவணைக்கான பரீட்சை அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால், மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் ஆறாம் திகதிக்கு முன் தமது இருப்பிடங்களுக்கு வருகை தரவேண்டுமென, கிழக்குப் பல்கலைக்கழக பதிவாளர் ஏ.டி. ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

விஞ்ஞான கற்கை நெறியின் விசேட பட்டத்திற்கான விரிவுரைகள் எதிர்வரும் 25 ஆம் திகதியும், மற்றும சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி கல்வி என்பவற்றுக்கான விரிவுரைகள் நேற்றும் ஆரம்பமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மற்றைய பீடங்களுக்கான நடவடிக்கைகள் நிலமை சுமுகமடைந்ததும் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை - யாழ்ப்பாணம், வன்னி மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த மாணவர்கள் தாம் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டதாகவும் - ஆனால், தற்போது விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு கூறும் பல்கலைக் கழக நிர்வாகம் தமது பாதுகாப்பு குறித்து எதுவித உத்த ரவாதமும் தரவில்லையெனவும் தெரிவித்தனர்.

அத்துடன், கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கடமையாற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் அச்சம் காரணமாக மீளவும் தமது கடமைக்குத் திரும்பவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

### கரவெட்டியில் ஆயுள்வேத மத்திய மருந்தகம் திறப்பு!

வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்திய அமைச்சின் கீழ் முதலாவது மத்திய மருந்தகம் கரவெட்டியில் நாளை காலை 10 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் வடக்கு கிழக்கு மாகாகண சுதேச வைத்திய பணிப்பாளர் இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

### வித்துடல்

கூட்டமைப்பின் வேட்பாளர் சொலமன் சூ.சிறில், நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஆகியோர் அஞ்சலி உரையை நிகழ்த்தினர்.

இதன்பின்னர், மாலை 5.30 மணியவில் வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித விதைகுழியில் விதைககப்பட்டது.

# துறைமுக அதிகாரசபை வாகனத்தில் கைத்துப்பாக்கி ஒன்று கண்டுபிடிப்பு!

அம்பாறை மாவட்டத்தில் துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான வாகனத்தில் வந்தவர்களிடமிருந்து 9 மி.மீ பிஸ்டல் ஒன்றும் இரு மகஸீன்களும் 30 ரவைகளும் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப் பட்டதுடன் வாகனத்தில் வந்த மூவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் எனுமிடத்திலுள்ள அல்லி மலைப்பகுதியில் நேற்று நடந்தது. இதுதொடர்பாக மேலும் தெரியவருவ தாவது -

துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான வாகனத்தில் கொழும்பிலிருந்து அம்பாறை நோக்கி வந்த பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மூவரிடமிருந்தே இந்தத் துப்பாக்கி விசேட அதிரடிப்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் சம்மாந்துறைப் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினரால் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் மூவரையும் பொலிஸார் அம்பாறை மாவட்ட நீதிபதி பி.எம்.மொகதீன் பாபாவின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது இந்த மூவருக்குமாக ஆஜரான சட்டத்தரணி இந்த ஆயுதம் துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையின் பாவனையில் உள்ள பதிவு செய்யப்பட்ட சட்டரீதியான ஆயுதம் எனத் தெரிவித்தார்.

இதனைச் செவிமடுத்த நீதிபதி மூவரையும் தலா ஐம்பதினாயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் எதிர்வரும் எட்டாம் திகதி இவர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரவேண்டுமெனவும் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார். (07)

# நோர்வேயை அழைத்தது...

ஐக்கிய தேசியக் கட்சி நோர்வேயின் உதவிகளைப் பெற்றதன் மூலம் வடக்கு - கிழக்கில் தனியான அரசு ஒன்றை அமைக்க காரணமாகியுள்ளது.

ஒவ்வொரு இலங்கையரும் தமது வாக்குகளை கட்டாயம் நாடு பிளவுபடுவதை எதிர்ப்போருக்கு அளிக்க வேண்டும்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இலங்கையை தமது சொந்த இலாபத்துக்காகவே கைப்பற்றினர்.

இந்த வகையில், எமது நாட்டின் மீது மேலாதிக்கம் செலுத்துவதற்காகவா நோர்வே தலையீடு செய்கிறது என்ற கேள்வி எழுகின்றது.

எனவே, மக்கள் எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தெளிவான ஆணையை வழங்கவேண்டும். இதன மூலம் நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாக்க முடியும்.

வடக்கு - கிழக்கில் இருந்து கிடைக்கக்கூடிய 28 ஆசனங்களின் ஆதரவுடன் ஆட்சியமைக்கலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி நினைக்கிறது. ஆனால், கருணா பிரச்சினைக்குப் பின்னர் அது சாத்தியமில்லை என்றாகிவிட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### அதாவுல்லாவை....

பாடசாலைகள் என்பன இயங்கவில்லை. வாகனப் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடைந்தது.

இருந்தும் நேற்று மாலை அரச உலங்கு வானூர்திமூலம் வந்த அதாவுல்லா கட்டைபறிச்சானில் கூட்டத்தை நடத்தமுடியாத காரணத்தால் நேற்று மாலை 5.30 மணியளவில் மூதூர் நகரிலுள்ள சென் அன்ரனிஸ் கல்லூரிக்குமுன்னுள்ள மைதானத்தில் தனது பிரசாரக் கூட்டத்தினை நடத்தினார். (10)

### கண்காணிப்பாளரை...

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாக்குச் சாவடிகளை அமைக்கத் தீர்மானித்துள்ளார்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் அமைப்பினர் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் தேர்தல்களை நடத்துவதற்காக தாம் முழுமையான ஒத்துழைப்பை தருவதாக தெரிவித்திருந்தார்கள்.

எவ்வாறாயினும், இறுதியில், இராணுவ்க் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாழும் மக்களின் உரிமைகளை மறுக்காமல் அந்தச் சந்தர்ப்பத்தினில் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்வதை வரவேற்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# குழப்பத்தில் முடிந்த....

ஊற்றி தீவைத்தனர். எனினும் புகை கிளம்பிக்கொண்டிருந்த நிலையில் தீ அணைக்கப்பட்டது.

ஆடுகளம் பரீட்சிக்கப்பட்டு, சாக்கு விரிப்பை மாற்றி ஆட்டத்தைத் தொடரத் தீர்மானிக்கப்பட்டது, இந்த நிலையில் பார்வையாளர் வரிசையிலிருந்து ஆடுகளத்தை நோக்கி கதிரைகள் தூக்கிவீசப்பட்டன.

குழப்பநிலை பதற்றமாக உருவெடுத்துக்கொண்டிருந்த நிலையில், மத்தியகல்லூரி அதிபரும், சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபரும் ஆட்டத்தை இடைநிறுத்துவதெனத் தீர்மானித்தனர்.

எனினும் பார்வையாளர்கள் மத்தியில் முறுகல்நிலை ஏற்பட்டது. இதையடுத்துப் பொலிஸார் தடியடிப்பிரயோகம் செய்து ரகளையில் ஈடுபட்டவர்களைக் கலைத்ததுடன் மைதானத்தை விட்டு சகலரையும் கலைந்து செல்லுமாறு அறிவித்தனர்.

இதையடுத்து மைதானத்தை விட்டு ரசிகர்கள் கலைந்து சென்றனர்.

அதேவேளை கலைந்து செல்லாமல் அந்தப் பகுதியில் காணப்பட்ட சில மாணவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சற்று நேரத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

நேற்று மாலை 9 மணிவரை அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது.

அதேவேளை, இரண்டு பாடசாலை அதிபர்கள், மத்திய கல்லூரி விளையாட்டுச்சபை, மூன்று நடுவர்கள் இணைந்த நடத்திய நீண்ட ஆலோசனையின் பின்னர் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஆட்ட நாயகனாக ரி.மதன்ராஜ் (சென்.ஜோன்ஸ்), சகலதுறை ஆட்டக்காரராக எஸ்.கிருஸ்ணகுமார் (சென்.ஜோன்ஸ்), சிறந்து துடுப்பாட்ட வீராக எ.ஜெசிந்தன் (மத்திய கல்லூரி) சிறந்த பந்துவீச்சாளர் பி.ரஜீவ்குமார் (மத்திய கல்லூரி) சிறந்த களத்தடுப்பாளராக சி.என்.தினேஸ் (சென். ஜோன்ஸ்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதேவேளை இன்றைய தினம் யாழ்.மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டியும்,

எதிர்வரும் 24 ஆம் திகதி இரண்டு கல்லூரி அணிகளுக்கும் இடையில் 50 ஓவர் கிரிக்கெட் போட்டியும் திட்டமிட்டபடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என மத்திய கல்லூரி அதிபர் இராசதுரை தெரிவித்தார்.

வடக்கின் பெரும் கிரிக்கெட் போட்டியின் பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (111,58)

### பொதுத்தேர்தல்....

கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்க முடியாத நிலையில் இருப்பதன் காரணமாகவுமே புரிந்துணர்வு உடன்படிக்கையில் சில விட்டுக்கொடுப்புகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாகவும், தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாக செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை - விடுதலைப் புலிகள் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள முன்வந்திருப்பதனை பவ்ரல் அமைப்பு வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெளிவந்துவிட்டது
கம்பியூட்டர் ஃபோக்கஸ்
'தகவல் ஊடாக நுட்பம் அடைவோம்'
யாழ்.மண்ணில் அனைத்து புத்தக சாலைகளிலும் பெறுக்கொள்ளலாம். நீங்கள் அனைவரும் வாங்கி வாசிக்க வேண்டிய அரியதோர் தகவல் புதையல்
120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
தமிழ் மண்ணில் இருந்து தமிழில் ஓர் கணினி மாத இதழ்
(சி-2333)




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.